கம்பன் கண்ட அறநெறி

கவிஞர் அரு. சோமசுந்தரன்

கம்பன்கண்ட அறநெறி

கவிஞர் அரு. சோமசுந்தரன், M. A., B. T.,
முதல்வர்; செட்டிநாடு தனிப்பயிற்சிக் கல்லூரி
(C. T. C.) காரைக்குடி,

பொன்முடி பதிப்பகம்
காரைக்குடி.

பொன்முடி: 35
உரிமை: ஆசிரியற்கே
முதற்பதிப்பு: 1971 ஜுன்

விலை ரூ. 2—00

Publishers:
PONMUDI PATHIPPAGAM
151, Chekkalai Road,
KARAIKUDI. (Rd. Dt.)

அச்சிட்டோர்: தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-1.

முன்னுரை

1. கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன் 2. திருமுறைகள் வீட்டு நூல் 3. கவிஞர் சோமசுந்தரன் கவிதைகள் 4. பக்திப் பாக்கள் 5. சிறுவர்க்கு விஞ்ஞானம் 6. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் 7. திரு. வி க. 8. ஐம்பொறிகள் என்னும் எனது கவிதைத் தொகுப்புக்கள் எட்டினை அடுத்து ஒன்பதாவதாக இத்தொகுப்பு உருவாகி உள்ளது,

பல்வேறு சமயங்களில் அரங்குகளில் நான் பாடிய பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள. இவை யாவும் அவ்வப்போது மக்களால் பாராட்டப்பெற்றவை. தொடர்ந்து என் கவிப்பணி நடைபெற இறையருளையும் மக்கள் அன்பையும் வேண்டுகிறேன்.

முதல்வர்; செட்டிநாடு
தனிப்பயிற்சிக்
கல்லூரி, C. T. C.
123, முத்துப்பட்டணம்
மூன்றும் தெரு,
காரைக்குடி .

அன்புசால்,

அரு. சோமசுந்தரன்

14—6—71

உள்ளுறை

தாய் வணக்கம்

அன்னை மீனாட்சி

சின்ன வயதில்வான் சேர்ந்தாலும் எம்முள்ளம்
பின்னி இருக்கின்றாய் பேச்செல்லாம்—அன்னாய்எம்
கண்ணில் ஒளியாகிக் காலமெலாம் காப்பாற்றி
மண்ணில் வளர்க்க மகிழ்ந்து.

முருகன் வணக்கம்

குமர குருபரன் அருண கிரியெலாம்
குழந்தை திருமலர் பரவினும்
அமரர் உலகெலாம் புவன முழுதெலாம்
அழகு வேல்மயில் ஒளிரினும்
குமர குருபரா! பழநி வேலவா!
குளிரு சீரலை சண்முகா!
அமரர் தளபதி! எனது பாவையும்
அழகு சூட்டியே மகிழவா!

— அரு. சோ.

காணிக்கை

(காலம்சென்ற தந்தையார் உயர்திரு. மு. ராம.
சித. முத்துராமன் செட்டியார் அவர்களின்
திருவடிக்கு)

முத்தான என்தந்தை முத்து ராம
முதுலகில் போராடி வெற்றி காண

சத்தான வழியமைத்துத் தந்த செம்மால்!
சலியாமல் உழைக்கவென உரங்கள் ஊட்டி

வித்தான தந்தாய்!நீ வானம் புக்கு
விளைவாகி நிற்கின்றாய் உனது பாதம்

கொத்தான என்றன்பா மாலை சூட்டிக்
குடைநிழலில் நிற்கின்றேன் வாழ்த்து வாயே!

—அரு சோமசுந்தரன்

பிற்சேர்க்கை

22. பொறியியல்

தேவகோட்டையில் 14—6—71 அன்று நடைபெற்ற C. T. C. & பொன்முடிப் பதிப்பகம் கட்டடத் திறப்புவிழாக் கவியரங்கில் திரு. லெ. கதிரேசன் செட்டியார் தலைமையில் பாடியது.

குற்றால அருவியெனக் கவிதை பாடிக்
கொட்டுகின்ற புலவீர்காள்! கவிதை கேட்க
உற்றாராய் வந்துள்ள பெரியீர் சான்றீர்!
உளமார வரவேற்று வணங்கு கின்றேன்
முற்றாத கவிதையினை உங்கள் முன்னே
முழங்குகிறேன் தைரியமாய்! எனக்கு நீங்கள்
பெற்றோர்கள்; ஆதலினால் துணிந்து வந்தேன்
பேச்செல்லாம் பாட்டாகும் காலம் அன்றோ! 1

பொறியியலை எழுதென்றால் மாணாக் கர்கள்
பொறியலென எழுதுகிறார்; மேலை நாட்டார்
பொறியியலில் முன்னேறி வாழு கின்றார்
பொறியலிலே முன்னேறி வாழ்கின் றோம்நாம்
அறிவியலும் பொறியியலும் கண்க ளாகும்
அதற்கெல்லாம் உயிர்நாடி கணக்கே ஆகும்!
வெறிபிடித்து மொழியுலகில் அலையா விட்டால்
வெற்றியெலாம் பொறியுலகில் விளைக்க லாகும் 2

பொறிஎன்றால் எந்திரத்தைக் குறிப்ப தாகும்
பொறிஎன்றால் தீனியையே நினைக்கின் றோம்நாம்
பொறிஇன்றி மேல்நாட்டார் வாழ மாட்டார்
பொறியினையே நம்நாட்டார் தேட மாட்டார்

கறிசமைக்க மேல்நாட்டில் பொறிக ளுண்டு
கடைசிவரை நம்நாட்டில் கையே உண்டு!
பொறியியலைக் கற்ருேமேல் நாமு மின்று
புவனத்தை ஆண்டிடலாம் ஐய மில்லை 3

சந்திரனில் கால்வைத்தார் அங்கே கூட
சரியாத காரினையே ஓட்டு கின்ருர்!
மந்திரமோ! மாயமதோ? என்னு மாறு
மனிதனின்றிக் காரோட்டி மகிழு கின்ருர்!
நந்திறமை யாருக்கும் வருவ தில்லை.
நலமான கார்கூடக் கவிழு மிங்கே!
எந்திரமும் மனிதனுமே வேறு வேரு?
இந்நாளில் எந்திரமாய் மனிதன் ஆனன்! 4

வானத்தில் கூண்டுகளை இணைத்து விட்டு
வலம் வந்து பூமியினை வணங்கு கின்ருன்.
வானத்துத் தேவருமே மனிதன் கண்ட
வகையான எந்திரத்துக் கஞ்சு கின்ருர்!
வானத்தைப் படைத்ததெலாம் இறைவன்; ஆனல்
வானத்தை அளக்கின்ருன் மனிதன் இன்று!
வானத்துக் கிரகங்கள் அனைத்தி னுக்கும்
வழிதேடி ராக்கெட்டை அனுப்பு கின்ருன். 5

ஒலிபெருக்கி வானெலிகள் கப்பல் கார்கள்;
உயர்வான விமானங்கள், கெடிகா ரங்கள்
வழிவகுக்கும் நீர்மூழ்கி, நிலத்து மூழ்கி,
வானத்தில் மூழ்குகிற எந்தி ரங்கள்
விழிபடைத்த மனிதனுக்கே அடிமை யாகும்
விண்ணுலக இந்திரனும் சிவனும் கூட
ஒளிபடைத்த பொறியியலின் வேகம் கண்டே
ஒதுங்குகிருர்; ஆதலினல் உயர்ந்தோர் நாமே! 6

சிவனென்றும் சக்தியெனப் படித்த துண்டு
செயல்மனிதன் சக்தியையே பிரித்து நல்ல
தவமிக்க பொறிகளிலே அடைத்து விட்டான்
தலைகீழாய் உலகத்தை நடத்து கின்ருன்
சிவபெருமான் சக்தியையே பிரிந்த தாலே
சிவனேஎன் றிருக்கின்ருன்; இன்று சக்தி
எவன்கையில்? தெரியவிலை? எந்தி ரத்தில்
இருப்பதெலாம் சக்தியடா என்ப தாலே 7

தேங்காய்கள் உடைக்கின்ருேம் மாலை சூட்டித்
தெளிவாகப் பூசைகளும் செய்கின் ருேம்நாம்
பாங்கான சக்தியவள் எந்தி ரத்துள்
பதமாக இருக்கின்ருள்; நமது தெய்வம்!
ஓங்கார சக்தியெலாம் உலகில் இன்ருே
ஓரணுவில் படைக்கின்ருன் மனித சக்தி!
ஆங்காரம் மனிதனுக்கே அழிவைத் தேடும்!
அறிவியலும் நெறிதவறின் அழிவே கூடும்! 8

கண்மூடித் திறக்கின்ற நேரத் திற்குள்.
கடல் கடந்து மலைகடந்து வானம் தாண்டி
விண்மூடிப் போகின்ற வாக னங்கள்
விரைந்தின்று பெருகுதடா! ஆனல் நாமோ
மண்மூடிப் போகின்ற பழக்கங் கட்கு
மதிமூடிப் போனதனல் அடிமை பட்டுக்
கண்மூடிக் கிடக்கின்ருேம். திருந்த வந்தோர்
கதைமூடிப் போயிற்று! கல்லே மிச்சம்! 9

பொறியியலைப் படித்தவர்கள் இந்த நாட்டில்
புதியபுது கருவிகளைச் செய்தி டாமல்
அறிவின்றி பாங்குக்கு மனுக்கள் போட்டே.
அதிகாரி ஆகின்ருர்; கடை வைக் கின்ருர்

செறிவாகப் பயிலாத குறையி னாலே
    செந்தமிழும் பொறியியலும் வளர வில்லை
குறியாகப் பயிலுங்கள் தொழில்கள் காத்துப்
    புதுமையினைப் படையுங்கள் நாடு வாழும்! 10

நல்லதொரு பொறியியலாம் பாடம் தன்னில்
    நமதருமை மாணவர்கள் தேர்ச்சி இன்றி
செல்லரித்த நிலையினிலே வாழு கின்றார்
    சித்திரமே புகைபடிந்தால் திட்டம் என்னும்?
வல்லவராய் மேல்நாட்டார் வாழ, கடை
    வண்டிகளாய் நாமிங்கே ஊரு கின்றோம்!
மெல்லமெல முன்னேறக் கால மில்லை!
    மேலான பொறியியலே வேகம் சேர்க்கும் 11

முன்னாளில் நம்நாட்டில் பொறிக ளுண்டு
    முயற்சியினால் மயிற்பொறியைச் செய்த தாலே
அந்நாளில் விசஸ,யயவள் நாடு தாண்டி
    அறிவாலே தப்பித்தாள்! அந்த நாளில்
பொன்னான புட்பகவி மான முண்டு!
    புகல்கின்ற ததுபற்றி இராம காதை!
தன்னாலே ஓடுகின்ற வான ஊர்தி
    தமிழ்நாட்டில் இருந்ததையும் சங்கம் கூறும்! 12

பொறியியலை இடைவழியில் புறக்க ணித்தோம்
    புகழ்மிக்க கணக்கெல்லாம் புதைத்து விட்டோம்
குறிகெட்டோம்; கோள்சொன்னோம்; உழைப்பை விட்டோம்
    கூண்டோடு கைலாசம் போகின் றோம்நாம்!
வெறியுற்றோம்; வேண்டாத விவாதம் செய்தோம்
    விளங்காத உலகத்தில் வீணாய் வாழ்ந்தோம்
பொறியியலை இனிமேலும் உணர்ந்து கொண்டால்
    புகழோடு வாழ்ந்திடலாம் புவனம் வாழ்த்தும்! 13

1 கம்பன் கண்ட அறநெறி

காரைக்குடி கம்பன் விழாவில் 8—4—71 அன்று
திரு. கி. வா. ஜகந்நாதன் தலைமையில் பாடியது

அறம்பாடும் கவியரங்கத் தலைமை ஏற்ற
அருள்பாடும் நற்றலைவ! அரங்கத் தோரே.
புறம்பாடும் தமிழுலகில் சிறியேன் இன்று
புகழ்பாட வந்துள்ளேன். புலமை இல்லேன்.
தரம்பாடும் கம்பன்தன் அரங்கி லேறித்
தமிழ்பாட முனைகின்றேன்; தலைப்புத் தந்தே
அறம்பாடச் சொல்கின்றீர்! என்ன செய்வேன்?
அதுநாளும் படும்பாட்டைப் பாடுகின்றேன். 1

அறம்இந்த உலகத்தில் எங்கே உண்டே?
அடியேனுல் இன்றைக்கிவ் வரங்கி லுண்டே!
அறம்என்னும் பொருள்பற்றிப் பேச லுற்ருல்
ஆச்சரியப் படுவோர்கள் பெருகிப் போனுர்
அறமெல்லாம் திருக்குறளில் அடைத்து விட்டோம்
அதன்நயத்தைக் கம்பனிலே பூட்டி விட்டோம்.
புறமாகநா முள்ளோம்; நமக்கு முன்னே
பொருட்காட்சிப் பொருளன்ருே அறங்கள் எல்லாம்

அறம்என்ருல் செலவென்றே அன்று சொன்னுர்
அறம்என்ற பெயராலே சம்பா திப்போர்
திறமாக வரியின்றி வாழு கின்ருர்
திருக்குறளும் அவர்முன்னே வரியா யிற்றே!

உரமாகக் கம்பனை நாம் எடுத்துச் சொன்னால்
ஒப்புக்குப் பிறரோடு "வாழ்க! வாழ்க!"
தரமாகத் தலையாட்டிக் கூவி விட்டுத்
தஞ்சாவூர்ப் பொம்மையென வாழு கின்றார். 3

பொம்மையெலாம் மக்களெனப் பொலிந்து நிற்கும்
புதுயுகத்தில் அறம்பற்றி அரங்கி லேறிக்
கம்பனை நாம் பாடுகின்றோம், அடடா! ஐயோ!
கண்ணில்லார் முன்னர்ஒளி காட்டு கின்றோம்.
பம்பரமாய்ச் சுற்றுகின்ற மக்கள் முன்னே
பழங்கால அறங்களெலாம் பலியா யிற்றே
கிம்பளமே அறமென்றும், பதவி ஒன்றே
கேடில்லாத் தெய்வமென எண்ணு கின்றார். 4

சிற்றன்னை சொல்லுக்காய் நாடு நீத்துச்
சேவைசெயப் புறப்பட்டான் கம்ப ராமன்
பெற்றவர்கள் முன்னேநல் அறங்கள் காத்துப்
பெறலரிய புகழ்பெற்ற இராமன் எங்கே?
பெற்றதொரு பதவியினைக் காப்ப தற்கே
பித்தலாட்டம் செய்கின்ற நாமும் எங்கே?
கற்றவர்கள் தலைவரெலாம் கட்சி மாறும்
காலமிது! இராமனறம் காதில் ஏறா! 5

அறத்துக்கே நாயகியாம் சீதை தன்னை
அரக்கனவன் மண்ணோடு பேர்த்த காலை
இரக்கமுள மண்மாதா பொறுத்துக் கொண்டாள்
இகழ்வாரை அகழ்வாரைத் தாங்கும் பண்பால்!
அரக்கனவன் சீதையினைத் தொட்டி ருந்தால்
அன்றைக்கே இராவணர்கள் அழிந்திருப்பர்!
இரக்கமுள மண்மாதா பொறுத்த தாலே
இன்றுவரை இராவணர்கள் உலவு கின்றார்!! 6

சீதையினை உயிரோடு கண்ட போது
சிதையாதே அறம்என்றான் அனுமன் அன்று!
பாதையினை மாற்றாமல் கற்பைக் காத்த
பண்பினையே பாராட்டிப் பேசு கின்றான்.
போதையிலே இராவணனே காத்தி ருக்க,
பொழுதெல்லாம் இராமனையே பார்த்திருக்க,
சீதையினைக் காத்ததுயார்? தருமம் தானே!
சீதையவள் அறத்துக்கே தலைவி அன்றோ 7
(வீடினதன்று அறன்... ...
தருமமே காத்ததோ ...... பாடல்கள்)

இலங்கை நிலை

ஊர்வசியோ ஒருபக்கம் மாவாட்டு கின்றாள்
ஒப்பில்லா மேனகையோ மிளகாயரைக் கின்றாள்
தார்மாலை பூண்டஇந்தி ராணியவள் சற்றே
தருமமிலா அரக்கியர்க்குக் கால்பிடித்து நின்றாள்.
பார்புகழும் இந்திரனே காளாஞ்சி ஏந்திப்
பலமுள்ள இராவணனின் பாதத்தில் நின்றான்.
சீர்மிகுந்த தேவரெலாம் தொல்லையிலே வாட
செல்வமெலாம் அரக்கரது கால்களிலே புரள 8

எண்ணுகின்றான் நல்லனுமான் என்னடா ஈது?
ஏற்றமெலாம் தீயவர்க்கா? ஏதடா தெய்வம்?
கண்ணிலையோ? தெய்வமெலாம் இகழ்பவர்க்கே தானோ?
காசுபணம் பதவியெலாம் அரக்கருக்கே தானோ?
அண்ணலுக்கும் நாயகிக்கும் துயரமிக்க வாழ்வா?
அரக்கருக்கும் முரடருக்கும் ஆர்ப்பரித்த வாழ்வா?
மண்ணுலகில் தீவினைகள் அறத்தினையே வென்று
மாய்த்திடுமோ எனச்சொன்ன மாயமொழி மெய்யா?
(வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்—பாடல்)

அறத்துக்கே நாயகனும் இராமன் அன்றில்
அறம்காக்க மிதிலைக்குள் நுழைந்த போது
கரம்நீட்டிக் கோட்டையிலே கொடிகள் எல்லாம்
கையசைத்தே ஒல்லையிலே வருக என்று
தரமாக அழைத்ததுவோ அந்தக்காலம்!
தரமில்லாக் கொல்லைவழி இந்தக் காலம்!
வரமாக வந்திட்ட இராமர் சீதை
வாய்ப்பாகச் சந்தித்தார் காதல் காட்சி! 10

தேனாக இனிக்குதடா! கண்கள் கவ்வித்
தித்திக்க நோக்குதடா! புனிதக் காட்சி!
வானார்ந்த காதலினை அறத்தின் போக்கில்
வடித்திட்ட கம்பநெறி இன்றைக் கெங்கே?
ஊனார்ந்த சதையோடு திரைப்ப டத்தில்
உருளுகின்ற காட்சியெலாம் காதல் என்றால்
தேனார்ந்த தமிழ்நாடே! உனது காதல்
தெருவோடு கல்லாகப் போயிற் றந்தோ! 11

தனக்குரிய நாடெல்லாம் தானே நீத்துத்
தரியாத மரஉரியைத் தரித்துக் கொண்டு
மனக்கவலை எதுமின்றி மனைவியோடு
மாநகரை இராமபிரான் நீங்கும் போது
கணக்கறியாப் பிள்ளைகளும் மைனா, பூனை
கண்ணீரைச் சிந்தினவாம்! அறத்தின் காலம்!
இணக்கமிலா இக்காலம் இராமன் நீங்கின்
எவர் அழுவர்? வேடிக்கை பார்ப்பர் அன்றோ! 12

பாதையிலே விபத்தாகி யாரும் வீழ்ந்தால்
பதைபதைத்தே ஒடோடி உதவு வார்கள்
சீதையவள் வாழ்ந்திருந்த காலம் தன்னில்!
சிந்தியுங்கள் இக்காலம் விபத்தி னாலே

பாதையிலே யாரேனும் வீழ்ந்து விட்டால்
படம்பிடிக்க ஓடுகின்றார்! பத்தி ரிக்கை
காதைகாதை யாய்எழுதிக் காசு சேர்க்கும்!
கலிகாலம்! அறமெல்லாம் காசின் கீழே! 13

அடியுண்ட வாலியுமே இராமன் தன்னை
அறத்தினுரு என்கின்றான், அதனால் தானே
அடிகண்டார் அனைவருமே அடியே கண்டார்
அவனடியில் வீட்டரசு வாலி பெற்றான்
பிடியுண்ட லங்கிணியும் அனுமன் முன்பு
பேசுகிறாள் "அறம் வெல்லும் பாவம் தோற்கும்"
கொடியான சீதையவள் அனுமன் வாலில்
கொழுந்துவிடும் தீயினையும் சொல்லால் வென்றாள்

அடையாத துன்பமெலாம் அடைந்த சீதை
அருங்கணவன் இராமன்முன் வந்த வேளை
உடையாத வார்த்தைகளைச் சொல்லி அன்றாள்
உள்ளத்தைச் சுக்காக உடைத்தான் இராமன்
இடையில்லாச் சீதையவள் கலங்கு கின்றாள்
இராமபிரான் தேறுதலில் தோற்றுப் போனான்
குடைந்தாடும் குளம்போலத் தீக்குள் பாய்ந்து
குலமாதா உயிர்மீண்டாள், அறமே வெற்றி! 15

வென்றிட்ட அறம்பாடி வேண்டு கின்றேன்
வெங்கொடுமைச் சாக்காட்டில் வீழ்ந்த போதும்
நின்றிடுவீர், வங்காள தேச மக்கள்
நிலைநாட்டும் அறப்பாதை! அதுவே வெல்லும்!
மன்றினிலே கவிபாடிப் பொழிவ தெல்லாம்
மக்கள்முன் நெஞ்சினிலே பதிய வேண்டும்
இன்றொருநாள் கம்பநெறி! நாளை என்ன?
என்றுமுள வம்புநெறி! வணக்கம் நன்றி. 16

2. வள்ளுவர் காட்டும் இல்லறம்

(ஒ. சிறுவயல் திரு. பா. இலக்குவன் — காந்திமதி திருமணக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கி 19—11—69 அன்று பாடியது)

நல்லறமாம் இல்லறத்தில் புகுந்து நிற்கும்
நாயகனும் இலக்குவனே! நங்கை யாரே!
இல்லறமே அறமென்பார்; மீதி எல்லாம்
இல்லாத அறம் என்பார்; என்பதாலே
இல்லறத்தில் சேர்ந்தீர்கள்; இன்று நாங்கள்
இயலரங்கில் கவியரங்கில் ஏத்து கின்றோம்
கல்லாத கலையெல்லாம் கற்று வாழ்வீர்
கற்கண்டில் தேன்மாரி உற்று வாழ்வீர். 1

சந்திரனில் அமெரிக்கர் காலை வைக்கும்
சமயத்தில் இல்லறத்தில் காலை வைத்தீர்
மந்திரத்தால் வாழ்க்கைநெறி அமைவ தில்லை
மாயத்தால் வாழ்க்கை நெறி மாற லுண்டு
தந்திரத்தால் சிலர் வாழ்க்கை அமைவ துண்டு
தரித்திரத்தில் சிலர்வாழ்க்கை உழல்வ துண்டே
எந்திரமாய்ச் சிலர் வாழ்க்கை இருப்பதுண்டே!
இல்லறமாய் நும் வாழ்க்கை இருப்ப தாக. 2

திருக்குறளைக் கற்கின்றார் மறப்ப தற்கே
தெய்வத்தைத் தொழுகின்றார் அழிப்ப தற்கே
உருக்கமுடன் வாழ்கின்றார் ஏய்ப்ப தற்கே
உண்ணாமல் இருக்கின்றார் ஒழிப்ப தற்கே
சுருக்கமுறப் பேசுகிறார் சூழ்ச்சி செய்ய
சுவையுணவைத் தருகின்றார் சூது செய்ய
திருக்குறளைக் கற்றீர்கள் மணமக் காள்நீர்
தெளிவுடனே அதன்படியே சென்று வாழ்வீர் 3

3. மாமரம்

(சிவகாசி S. H. N. V. உயர்பள்ளி இலக்கிய மன்றத் தமிழ் விழாவில் இராமாயண கலாமணி திரு. S.V. இராமசாமி தலைமையில் 17—1—71 அன்று பாடியது)

காசியினும் சிவமாக இருக்கு மிந்தக்
காசிசிவ காசியிலே நாடார் பள்ளி
தூசியையும் அறிவாளி ஆக்கு கின்ற
தொன்மையது; நூறுசத வீத வெற்றி
வாசியுடன் ஆண்டு தொறும் வழங்குகின்ற
வண்மையது; பால்ராஜாம் தலைமை ஆசான்
மாசிலாத தன்மையுடன் பணிக ளாற்றும்
மாண்பினது; தளராமல் உழைப்ப தற்கே 1

உருவெடுத்த ஆசிரியர் கூட்ட மிங்கே;
உற்சாகம் துளிமாரு நிர்வா கத்தார்
கருவினிலே திருவுடைய மாணுக் கர்கள்!
கைகொடுத்தே உதவுகின்ற உயர்ந்த பெற்ருேர்!
திருவுடைய நகரத்து மக்கள்; எல்லாம்
தெம்புடனே வளர்க்கின்ற நாடார் பள்ளி
பெருமையுடன் எடுக்கின்ற தமிழ்வி ழாவில்
பெட்புடனே என்வணக்கம் ஏற்றுக் கொள்வீர் 2

பாவலர்கள் மற்ருேரைக் கேலி செய்து
பார்ப்பார்கள்; ஆனுலோ நீங்கள் இங்கே
ஆவலுடன் பாவலரை அழைத்து வந்தே
அரங்கேற்றி மரமாக அமர்த்தி விட்டீர்
காவலர்கள் சூழ்ந்துள்ளீர்; ஆத லாலே
கவிபாடித் தப்பிக்க முயலு கின்ருேம்
நாவலர்கள் ஆதலினுல் மரத்தைக் கூட
நடமாட வைக்கின்ருேம்; நன்மை தானே! 3

மாணவனாய் நானிருந்த காலம் தன்னில்
    மரமாக இருந்ததில்லை; ஆனால் இங்கே
ஆனவர்கள் எனைமரமாய் ஆக்கி விட்டார்
    ஐயகோ! நானென்ன கொடுமை செய்தேன்?
தானவரும் மரமாக ஆன துண்டு;
    தலைவிதியால் தேர்தலிலே சிலபேர் நின்று
போனவரும் மரமாக நின்ற துண்டு;
    பொறுக்குபவர் மரமுதிர்த்த காட்சி யுண்டு! 4

எனையிங்கே மரமாக இருத்தி விட்டார்
    என்முன்னே பலமரங்கள் நிறுத்தி விட்டார்
பனையாக நானிருந்தால் ஓலை யாவேன்
    பலாவாக நானிருந்தால் சுளைகள் ஆவேன்
மனைவாழை ஆயிருந்தால் குலைகள் ஆவேன்
    மலைவேம்பாய் இருந்திட்டால் எண்ணெய் ஆவேன்
சுனைவேங்கை என்றாலோ மலராய் ஆவேன்
    சூழ்கின்ற அரசானால் நிழலாய் ஆவேன். 5

பிறமரங்கள் அத்தனையும் வளர்ந்த பின்னே
    பெரியமரம் ஆகின்ற பெருமை உண்டே!
உறவாக எனக்குத்தான் உரிச்சொல் மாவை
    உருவாகும் போதினிலே ஒட்டி விட்டார்
உரமாக ஒட்டியதால் ஒட்டாய் நின்றேன்
    உலகத்தில் மாமரமாய்ப் பட்டாப் பெற்றேன்.
மரமான பிறவெல்லாம் துறவாய் நிற்க
    மரஉலகில் கூட்டணியும் நானேதானே! 6

புளிமரத்தில் இனிமாத்தை ஒட்டு வார்கள்
புதுமரமாய் நானங்கே புனைந்து நிற்பேன்
ஒளிபடைத்த சிறுவரெலாம் கல்லெ டுப்பார்
ஓயாமல் நானங்கே ஒளிந்து நிற்பேன்
களிபடைத்த கருவுடைய மாத ரெல்லாம்
காயெடுப்பார் நானங்கே புளித்து நிற்பேன்
விழிபடைத்த காதலர்கள் மொழிப டைத்து
விளையாடும் போதெல்லாம் வெட்கி நிற்பேன் 7

மாநிறமே மேனியென வர்ணிப் பார்கள்
மாம்பழமே கன்ன மெனக் கிள்ளு வார்கள்
மாநிறத்து மங்கையரின் கண்கள் தம்மை
மாவடுவே பிளந்ததென மகிழு வார்கள்
மாநிலத்துக் கலப்புமண மக்கள் தம்மை
மகிழ்வுடனே ஒட்டுமாஞ் செடிஎன் பார்கள்
பாநலத்துச் சீர்களிலே கவிஞர் நாளும்
பரிவோடு காய்கனிச்சீர் என்பார் அன்றோ. 8

ஒட்டுதற்கும் நானேதான்; உங்கள் வீட்டில்
ஊறுகாய்க்கும் நானேதான்; காணிக் கைகள்
கட்டுதற்கும் நானேதான்; பலகை ஆன
கதவுகளும் நானேதான்; கல்யா ணத்தில்
தொட்டதெலாம் நானேதான்; மாநா டெல்லாம்
தோரணமும் நானேதான்; தின்ற பின்னே
விட்டெறிவீர் நானேதான்; அங்கே மீண்டும்
விரைந்தெழுவேன் நானேதான்; விளைந்து
நிற்பேன். 9

பால்பொழியும் பசுங்காம்பைத் தொட்டால் அங்கே
பால்சுரக்கும்; காயாகி முதிரு முன்னே
தோல்மீது கல்பட்டால் கன்னிப் போவேன்
துயரின்றி முதிர்ந்தபினே பறித்தீர் ஆனால்
சால்பாக நாணத்தால் சிவந்து நிற்பேன்
சரியாகக் கையாளா விட்டால் அங்கே
ஏல்பாக அழுவேன்நான்; சிலரைப் போல
இளமையிலே வெம்பிடுவேன்; எனவே
பெண்நான்! 10

பட்டையெலாம் சாராயம் ஆகும் நாளில்
பட்டைநான் சாராயம் ஆக மாட்டேன்
மட்டையெலாம் எனக்கில்லை; பலகை உண்டு;
மதிப்புடைய உத்தரமும் நானே அன்றோ
கட்டையெலாம் விறகாவேன்; பூவை யெல்லாம்
கனிவுடைய ரசமாக்கிப் பருக வைப்பேன்
சொட்டைசொல ஏதுமிலை உலகில் இன்று
சோறுள்ள இடமெல்லாம் நானும் உண்டு. 11

நாபோலத் தருவதனால் நாதா என்றார்
நலமின்றி இவ்வுலகில் அனைவ ருக்கும்
சாபோலத் தருவதனால் சாதா என்றார்
சங்கடமே இல்லாமல் எந்தப் போதும்
மாபோலத் தருவதனால் மாதா என்றார்
மாண்புடைய உலகத்தீர் மறவா தீர்கள்
மாபோலச் சோறூட்டும் ஒருத்தி யாரே?
மாதாதான்; மனைவியில உணர்ந்து கொள்வீர் 12

சேலத்தில் இரும்புள்ள போதும் அந்தச்
சேலமெனில் என்னைத்தான் சிந்தை கொள்வர்
கோலத்தில் பலஉண்டே என்ற போதும்
கொத்தென்றால் என்னைத்தான் உவமை கொள்வர்

ஏலத்தில் எடுத்தாலும் அடிமை ஆவேன்
இதயத்தில் அணைத்தாலும் உவமை ஆவேன்
காலத்தில் புரோகிதர்கள் கரத்தில் எல்லாம்
கரண்டியென நீர்தெளிக்கக் காத்து நிற்பேன் 13

எனைஒட்டிப் பிழைக்கின்றார்; தோட்டம் தன்னில்
இதம்உழைத்துப் பிழைக்கின்றார்; சிலபேர் நாளும்
எனைவெட்டிப் பிழைக்கின்றார்; வெட்டு வோனை
இவன் வெட்டிப் பயலென்றே ஏசுகின்றார்

மனைகட்டிப் பிழைக்கின்றார் சிலபேர் மற்றும்
மரம் கட்டிக் காக்கின்றார் மூளை யுள்ளோர்!
அணைகட்டி வளர்த்தாலும் வருவேன்; அங்கோர்
அறம்கட்டி முறித்தாலும் முறிவேன் அன்றோ! 14

மாபோல வாழுங்கள் உலகத் தீரே!
மனம்போல ஈயுங்கள் வாழ்நாள் எல்லாம்
காபோலக் காவுங்கள் சூழ்ந்தோ ரெல்லாம்
கனிபோல இளகுங்கள் சேர்ந்தோர் முன்னே!

தூபோலத் துப்பிய மாங்கொட்டை யாகத்
துளிர்த்தெழுந்தே மறுபடியும் பணிகள் செய்வீர்
பூபோலத் திரண்டொன்றாய்ச் சிறந்து வாழ்வீர்
புறப்பட்டேன் தோப்புக்கே விடைகள் தாரீர் 15

4. திருக்குறளின் சிறப்பு

பரமக்குடி A, V. உயர்நிலைப்பள்ளித் திருவள்ளுவர் திருநாள் கவியரங்குக்குத் தலைமைதாங்கி 2—2—70 அன்று பாடியது

பாரி மகள்பாடும் பறம்பு மலைஅங்கே!
பள்ளி கவிபாடும் பறம்புக் குடியிங்கே!

பள்ளி எனும்பெயரில் பலபள்ளி தூங்குகையில்
துள்ளிக் கவிபாடும் தூயமணிப் பள்ளியிது!

பாட்டை எடுத்தாலே மாணவர்கள் பலஇடத்தில்
ஓட்டம் எடுக்கின்றார்; உங்களுக்கோ அதுகரும்பு!

பாட்டைப் படிஎன்றால் மாணவர்கள் அதைப்படுத்தும்
பாட்டை என்னென்பேன்; சிலபேரோ அவர்பாட்டுக்

கேதோ பேசிடுவார்; எழுந்திருப்பார், சென்றிடுவார்
காதோ இங்கிருக்கும் கவனமே எங்கிருக்கும்?

இந்தச் சூழ்நிலைதான் இந்நாட்டின் தலைவிதியாம்!
அந்தச் சூழ்நிலையில் ஆயிரவை சியர்பள்ளி

படிப்பில் முதன்மையடா! பாட்டரங்கில் முதன்மையடா!
துடிப்பில் முதன்மையடா! துள்ளுகின்ற சிங்கமடா!

இந்தக் காலத்தில் இருக்கின்ற பிள்ளைகளோ
சந்தைக் காட்சிகளை வகுப்பறையில் காட்டிடுவார்!

இன்னும் சிலஊரில் ஓட்டின்மேல் இருப்பார்கள்!
பின்னும் சிலஊரில் வீட்டிலேயே இருப்பார்கள்.

தந்தை அஞ்சிடுவார்; தாயாரும் அஞ்சிடுவாள்;
முந்தை வினையாலே மாணவர்கள் முழங்கிடுவார்;

ஆனால் இங்கென்ன? அத்தனையும் மாற்றமடா!
போனால் போகட்டும் ஒருபள்ளி பிழைத்ததுவே!

இந்த மாணவர்கள் இருக்கின்ற நிலைகண்டு
வெந்த சோறெனவே விளம்புகிறேன் நல்லுவமை!

ஆக்கும் ஆசான்கள் அகப்பையெலாம் தங்கமடா!
தேக்கும் கல்வியிலே தெளிகின்ற கல்வியிது!

என்றன் உயிர்நண்பர் இப்பள்ளி தலையாசான்
தென்றல் காற்றேதான்! தீட்டுகின்ற வைரமதோ!

சுழலும் பம்பரமோ! சுற்றிவரும் நற்றேரோ!
விழலை அறுத்தோடும் வெற்றிமிகு வாய்க்காலோ!

சங்கத் தமிழ்ப்பாட்டோ! சங்கரநா ராயணரே!
சிங்கம் இருக்கின்ற குகையிலெனைப் பாடென்றால்

என்ன பாடிடுவேன்? என்முழக்கக் உங்கள்முன்
சின்னக் குழந்தையதன் சிறுமதலை ஆகாதோ?

மன்னும் கவியரங்கில் வள்ளுவனைப் பாடியிவண்
தின்னக் கரும்புடனே எண்புலவர் வந்துள்ளார்.

குருவை உங்கள்முன் நற்குறளைப் பாடுகிறார்
இருளை ஓட்டிடுவார் இருள்இங்கே இருந்திட்டால்!

குறளின் பெருமைதனைக் கூறிடவோர் நாவுண்டோ?
நறவின் சுவைபார்க்க நாநிலத்தில் நரம்புண்டா!

திருக்குறள்

சங்கத் தமிழீந்த சன்மார்க்கப் பேழையது!
தங்கக் கிண்ணத்தில் குழைத்திட்ட அமிழ்தமது!

வான முழுநிலவோ வையத்தின் நல்வயலோ?
ஆன நீதியெலாம் அறைத்திட்ட நற்சாறோ?

காலம் அத்தனையும் கடந்திட்ட தெய்வமதோ!
கோலம் அத்தனையும் கடந்திட்ட கோயிலதோ!

இல்லாப் பொருளில்லை; எமதருமைத் திருக்குறளில்
சொல்லாப் பொருளில்லை; சுயநலமே நீதியென

வாழும் வையத்தைத் திருத்துகின்ற வழிகாட்டி!
பாழும் உலகத்தின் பதர்நீக்கும் மெருகூட்டி!

பொய்யே கலையாகப் புறப்பட்ட மக்களுக்கு
மெய்யை உணர்த்துகிற மேலாடை நூலாடை!

உலக மக்களுக்கே ஒருசோற்றுப் பதமாக
நிலவும் குறள்கற்ருல் நீணிலத்தில் பகையுண்டோ?

சாதி சமயத்தால் சண்டைகளும் இங்குண்டோ?
ஆதி முதலாக அகரத்தின் முதலாக

வந்த திருக்குறளை வாயாரக் கற்றிடுவீர்
சொந்த சொத்ததனைச் சோற்றுக்கே விற்காதீர்.

புதையல் எனஅதனை மண்ணுக்குள் புதைக்காமல்
சதையை இழந்தாலும் திருக்குறளை இழக்காமல்

கற்று முன்னேறிக் களிகூர்ந்தால் தமிழரினம்
சுற்றுப் பெருக்காதோ? சூழ்ச்சியெலாம் ஓயாதோ?

தமிழர் உலகத்தில் தன்னிகரில் வள்ளுவனின்
அமிழ்தச் சிறப்பெல்லாம் அரங்கேற்ற வந்துள்ளார்

எட்டுப் பெருங்கவிஞர் இவர்கவிதை ஒவ்வொன்றும்
கொட்டு முரசன்ருே குறள்பரப்பும் மலரன்ருே!

அன்னோர் கவிகேட்க அழைத்திங்கே என்கவிதை
நன்றே முடிக்கின்றேன் நான்.

5 இரண்டு

காரைக்குடி செந்தமிழ் அறிவுக் கழக இரண்டாம்
ஆண்டுவிழாவில் 16—5—71 அன்று
திரு. மா. கண்ணப்பன் M. A. தலைமையில் பாடியது

திரண்டிங்கே கவிகேட்க வந்திருக்கும்
தீந்தமிழர் பரம்பரையே! தலைவ நண்ப!
இரண்டிரண்டாய் அங்கங்கே நின்று கேட்கும்
இனியோரே! உங்கள்முன் அரங்கி லேறி
இரண்டென்னும் பொருள்பற்றிக் கவிதை பாட
எழுந்துள்ளேன், கடைசிவரை இங்கே மிச்சம்
இரண்டொருவர் தங்குவரேல் எனது பாட்டில்
இனிமை மிக இருந்ததென எண்ணிக் கொள்வேன் 1

ஒன்ருக இருப்போர்கள் இரண்டாய் ஆனல்
உயர்வென்றே எண்ணுகிருேம்; அதுவே வாழ்க்கை
ஒன்ருக இருக்கின்ற கட்சி எல்லாம்
உத்தமர்கள் சிலராலே இரண்டாய் ஆகும்.
குன்ருக இருப்போர்கள் பிளந்தால் அங்கே
குழியெல்லாம் குன்றத்தை விழுங்கி டாதோ?
வென்ருேரும் தோற்ருேரும் இரண்டே கட்சி!
விதி வசத்தால் நம் நாட்டில் ஒன்றே கட்சி! 2

சிவனென்றும் சக்தியென இரண்டைச் சொல்வர்
செந்தமிழும் கொடுந்தமிழும் இரண்டே ஆகும்
அவனென்றும் இவனென்றும் பிரித்து வைப்பார்;
அவர்க்குள்ளே மிகச்சிலரே சிரித்து வாழ்வார்!

தவறென்றும் சரியென்றும் இரண்டே ஆகும்
தலையென்றும் காலென்றும் எல்லை ஆகும்
சவமென்றும் உயிரென்றும் இரண்டாய்ச் சொல்வர்
சவம்கூடச் சிலசமயம் உயிராய்த் தோன்றும்! 3

உடம்பினிலே கண்ணிரண்டு காலும் ரெண்டு;
உயர்கைகள் கால்ரெண்டே, ஒன்ருய் வைத்த
திடமில்லா நாக்கினையும் மனிதன் இன்று
திறமாக இரண்டாக ஆக்கிக் கொண்டான்
இடம் போலப் பேசுகிருன், வலத்தில் நிற்பான்
இதயத்தில் தன்னலமாம் ஒன்றே கொள்வான்!
இடம்பெற்ற குடும்பத்தில் குழந்தை இந்நாள்
இரண்டுக்கு மேல்வேண்டாம், குடும்பத் திட்டம்! 4

மருந்தென்றும் நோயென்றும் இரண்டே என்ருர்.
மருந்துகளே நோய் செய்யும் கால மீது!
பருந்தாக இருப்போர்கள் புகுந்தால் ஊர்கள்
பாழாகும் இரண்டுபடும்; கூத்தா டிக்கு
விருந்தாகும்; சிலபேர்கள் பார்வை கெட்டால்
வீதியிலே தெரிவதெலாம் இரண்டாய்த் தோன்றும்;
பொருந்தாத புகைவண்டித் தண்ட வாளம்
புதுப்பாடைக் கம்பெல்லாம் இரண்டே அன்ருே! 5

பிறப்பென்றும் இறப்பென்றும் இரண்டாய்ச் சொல்வர்
பிறந்தமுதல் இறுதிவரை நித்தம் செத்து
மறப்போரும் இருக்கின்ருர், இந்த நாட்டில்
மகிழ்வான இல்லறமும் துறவும் என்றே
அறத்தினையே இரண்டாகப் பிரித்துச் சொன்ஞர்
ஆனாலும் துறவினிலே அனைத்தும் துய்க்கும்
துறவோரும் இருக்கின்ருர், இரண்டும் கெட்டார்!
தொல்லுலகில் இருவேறு இயற்கை தானே! 6

பிள்ளையிலே இரட்டையெனப் பிறப்போ ருண்டு,
பிள்ளையாரும் இரட்டையாக இருத்தல் உண்டு
கள்ளமிலா இரட்டையர்கள் புலவ ராஞர்
கலிகால அரட்டையரும் புலவ ரின்று!
வெள்ளமெனக் கவிபாடும் ஒட்டக் கூத்தன்
வெற்றிமிகு பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள்!
உள்ளமெலாம் கொள்ளைகொளும் ஒட்டு மாவும்
உலகத்தில் ரெட்டையினக் கலப்பே அன்ளுே! 7

மணம் ஒன்ருய் இருந்தோர்கள் மகிழ்ச்சி கொண்டார்!
மணமிரண்டு செய்தோர்கள் காலப் போக்கில்
கணமெல்லாம் மத்தளமாய் ஆகி அந்தோ,
கைகட்டி வாழ்கின்ருர் பெட்டிப் பாம்பாய்!
பிணமாக வாழ்ந்திடலாம்; ஆனுல் ரெண்டு
பெண்டாட்டிக் காரனென வாழ லாமோ!
தணலாக வாழ்ந்தோரும் மனைவி முன்னே
தவிடாக வாழ்கின்ருர் ரெட்டை வேடம்! 8

தினையென்றும் பனையென்றும் அளவு சொல்வர்
தேள்பிள்ளைப் பூச்சியெனத் தெளிவு சொல்வர்
மனையென்றும் மாடென்றும் இணைப்பு சொல்வர்
மச்சென்றும் குச்சென்றும் பெருமை சொல்வர்
சினையென்றும் இலையென்றும் வளர்ச்சி சொல்வர்
சிலையென்றும் கல்லென்றும் கலையைச் சொல்வர்.
புனையென்றும் மெய்யென்றும் நடப்பு சொல்வர்
புகழென்றும் இகழென்றும் முடிவு சொல்வர்! 9

உடம்பென்றும் உயிரென்றும் இரண்டு கண்டோம்
  உடம்புக்கே இவ்வீடு; நல்லோர் உயிர்க்கே
திடமான அவ்வீடு; தெளிந்த உண்மை!
  திருப்பணிகள் செய்த உயிர் அங்கே செல்லும்
மடம்கொண்ட திரிசங்கு வரத்தைப் பெற்று
  மனிதஉடம் போடந்த வீடு செல்ல
அடம்பிடித்தான்; அதனாலே இரண்டு பக்கம்
  அடிபட்டான்; திரிசங்கு சொர்க்க மானான்! 10

அதுபோல இன்றைக்கும் இரண்டு கட்சி
  ஆளாக இருப்போர்க்கும் இதுவே காட்சி!
மதுவேண்டும் வேண்டாமென் றிரண்டு கட்சி!
  மதிப்பிழந்த பாகிஸ்தான் கிழக்கு மேற்காய்
எதுவாக இருந்தாலும் இரண்டாய் ஆச்சே!
  இங்கேயும் வடக்குண்டு தெற்கு முண்டு!
பொதுவாகக் கலைநாமம் இரண்டு முண்டு!
  போற்றுதலும் தூற்றுதலும் இரண்டே அன்றோ! 11

குனிவோரும் உயர்வோரும் இரண்டு பட்டார்
  குலம்கூட ஈகையினால் இரண்டே ஆகும்!
இனிமேலும் இரண்டினை நான் பாடு வேனேல்
  எனையிங்கே இரண்டாகப் பிளந்து போட
முனைவீர்கள்; ஆதலினால் கவிதை மூடி
  மூன்றினுக்கு வழிவிட்டுச் செல்லு கின்றேன்
இணையான ஊருடனே பேரும் ரெண்டாய்
  இருக்கின்றேன் என்பதனால் ரெண்டும் நானே! 12

6 குடியரசு

புதுவயல் ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை

பழையமாணவர் சங்க ஆண்டுவிழாக் கவியரங்கில்

14—5—71 அன்று தலைமை தாங்கிப் பாடியது

குடிமக்கள் வாழ்வெல்லாம் சிறப்ப தொன்றே
குடியரசா? மற்றிந்த மக்கள் கையில்
குடிவகைகள் ஏராளம் பெருகு தல்தான்
குடியரசா? என்றவினு எழுப்பும் வேளை
குடியரசைப் பற்றிஇவண் கவிதை பாடக்
கூடியுள்ள பாவலரே! பெரியீர்! நல்லீர்!
குடியான வர்களெலாம் சோர்ந்து நிற்கும்
குடியரசில் பாட்டென்ன பதமே மிச்சம்! 1

உழைக்கின்றார் நாளெல்லாம் வயலில்; ஆனால்
உண்பதுவோ அரைவயிறே; தறியின் கீழே
பிழைக்கின்றார் நாளெல்லாம் கட்டு தற்குப்
பெருங்கந்தை மிச்சமடா; கோடை வெய்யில்
மழைக்கெல்லாம் கட்டுகிறான் கொத்தன் வாழ்வில்
குடிசையுமே இல்லையடா! இந்த நாட்டில்
பிழைக்கின்றார் அனைவருமே காட்டும் பாதை
பிணியரசா! குடியரசா! சிந்திப் பீரே! 2

முறையாக உழைப்போர்கள் வாழ்வில் என்றும்
முன்னேற்றம் காணமல் தவிக்கின் றார்கள்
குறையாமல் பிறர்பற்றிக் குறையே கூறிக்
கோள்சொல்லிப் பிழைப்போர்கள் கொழுந்து
விட்டார்

மறைவாக வஞ்சிப்போர் கடமை தன்னை
மதியாதார் அனைவருமே உயர்ந்து விட்டார்!
நிறைவான உழைப்பாளி சோர்ந்து நின்றான்
நிலமொன்றே அவன்காலை வார வில்லை! 3

பிறந்தார்கள் அனைவருக்கும் இந்த நாட்டில்
பிழைப் பென்ன உறுதியடா? படித்துவிட்டுச்
சிறந்தார்கள் அனைவருமே யார்யா ருக்கோ
சிரம்தாழ்த்தி வாழுகிறார்; சீச்சி! வாழ
மறந்தாலும் மறப்பார்கள்; மனிதன் என்ற
மனமொன்றை இழந்தார்கள்; இந்த நாட்டில்
இறந்தார்கள் அனைவருக்கும் பெருமை உண்டே!
இருப்பார்கள் அனைவருக்கும் சிறுமை தானே! 4

இன்று படிப்பும் தொழிலும்

சட்டத்தைப் படிப்பார்கள் கடைவைப் பார்கள்!
சங்கீதம் படிப்பார்கள் கணக்கர் ஆவார்
பட்டங்கள் பொறியியலில் பெற்று விட்டுப்
படியேறி வங்கிக்குப் படையெ டுப்பார்;
இட்டமுடன் பலதொழிலைப் படித்த பின்னே
இன்னொருவர் தொழிலுக்குப் போட்டி யாவர்
நட்டமெதும் இல்லாமல் படியா தார்கள்
நாயகராய்ப் பவனிவரும் நாடே ஈது! 5

பள்ளிக்குப் படிக்கவெனப் போவார்; அங்கே
படைஏந்தக் கொடிஏந்தப் பயிற்சி கொள்வார்
வெள்ளத்தில் மீன்பிடிக்கப் போனால் அங்கே
வெறுங்கையாய்த் திரும்பிடுவோர் யாரும் இல்லை

பள்ளிக்குப் பயிலவெனப் போனார்; சற்றும்
படியாமல் தலைவரெனத் திரும்பு கின்றார்!
கள்ளமிலாத் தாயகமே! இரத்தக் கண்ணீர்
காட்டுகிறாய்! உன்கதியே இதுவே தானோ! 6

பெண்ணாகப் பிறந்தோர்கள் வீடு தோறும்
பெருமூச்சு விடுகின்றார்; பெரியோர் எல்லாம்
எண்ணாமல் திருமணத்தை வணிக மாக்கி
ஏதேதோ சீர்முறைகள் எழுதி வைத்து
கண்ணான பெண்ணினத்தைக் கண்ணீர் சிந்தக்
கைகாட்டி விட்டார்கள்; வாழ்க்கை இன்றித்
தன்னாலே சாகின்றார் பெண்கள் எல்லாம்
தரம்பற்றிப் பேசுகிறார் பெரியோர் எல்லாம்! 7

நீதிக்கும் நேர்மைக்கும் நாட்டில் இன்று
நிலையான இடமுண்டா? நீதி மன்றில்
ஆதிமுதல் லஞ்சப்பேய்; அரசாங் கத்தில்
அத்தனையும் லஞ்சப்பேய்; சமுதா யத்தில்
சாதிப்பேய் சமயப்பேய் நம்மைச் சுற்றிச்
சாக்கடைகள் ஏராளம்; எதையும் இங்கே
சாதிப்பேன் எனச்சொல்லிக் கிளம்பு வோர்கள்
சமாதிப்பேய் ஆவார்கள் சான்றே வேண்டாம் 8

பல்லாண்டாய்க் குடியரசாய்க் காட்சி தந்து
பாருக்குப் பலமுறைகள் வாக்க ளித்துச்
செல்லாத காசெல்லாம் செல்ல வைத்துச்
சில்லறைக்கே எல்லோரும் ஏங்க வைத்து
நல்லார்கள் அனைவரையும் தூங்க வைத்து
நாடாள்வார் அனைவரையும் வீங்க வைத்துப்
பொல்லார்கள் அனைவரையும் ஓங்க வைத்த
புகழ்மிக்க தாயகமே! வாழ்க்கை நன்று! 9

கடமையினைச் செய்வோர்கள் காலின் கீழே;
கண்ணீரே அவர்கட்குக் கடைசி மிச்சம்!
கடமையினைச் சற்றேனும் மதியா தார்கள்
கடவுளையும் பின்னேறச் செய்து விட்டார்!
உடமைஎலாம் உரிமைஎன முழங்கு வோர்க்கே!
உதிரமெலாம் கடமைஎனச் சிந்து வோர்க்கே!
கடமையினைச் செய்திடுவோம் பரவா யில்லை
கதிமோட்சம் இல்லெனினும் கடமை நன்று! 10

பதவியினைப் பெற்றோர்க்கே இந்த நாளில்
பாராட்டுச் செய்கின்றார் பரிசு தந்தார்!
உதவியினை வேண்டாதார் அனைவ ருக்கும்
ஒப்பற்ற கார்விடு வைர மாலை
பதவியிலே உள்ளவரை வரிசை யாகும்!
பதவியினை விட்டபினே மக்கள் எல்லாம்
கதவினையே சாற்றுகிறார்; வென்றோர் தேடிக்
கார்களெலாம் புறப்படுமே! பதவிக் காலம்! 11

உலகத்தார் கடமையினைப் பற்றி இங்கே
உயர்கவிதை பாடவென வந்தி ருக்கும்
பலகற்ற பாவலர்கள்! உங்கள் முன்னே
பசியோடு காத்திருக்கும் மக்க ளுக்கு
நலமுற்ற கவிச்சோறு படைக்க வேண்டி
நானுற்ற தலைக்கவிதை முடித்துக் கொண்டேன்
தலமுற்ற பெரியோரே! உங்கள் பிள்ளை
தலைதாழ்ந்து வணங்குகிறேன்! வணக்கம் நன்றி! 12

தொழிலாளி

வேர்வையினைச் சிந்துபவன் கடவு ளென்றே
வெற்றிமிகு வங்கத்துத் தாகூர் சொன்னார்
பார்வையெலாம் பணப்பெட்டி படிந்த காலம்!
பாதையெலாம் குறுக்குவழி நோக்கும் நேரம்!
வேர்வையினை எண்ணிடுவோர் வீழ்ந்து விட்டால்
விதவையென ஆகாதோ உலகம் தானே!
கோர்வையுடன் அவர்நிலைமை கொதித்துச் சொன்னால்
கொந்தளிக்கும் உள்ளங்கள் குமுறும் அன்றோ! 13

உழைக்கவெனப் பிறந்தஇனம் இன்று நாட்டில்
ஒத்துழையா மையினிலே உறங்கு தையா!
உழைப்பெல்லாம் புறக்கணித்துக் கொடிக ளேந்தி
ஊர்வலங்கள் மாநாடு நடத்திக் கொண்டு
பிழைக்கின்றார் சிலபேர்கள்; அவர்க ளுக்குப்
பின்பாட்டுப் பாடுகின்றார் தொழிலா ளர்கள்!
அழைக்கின்றேன் தொழிலாளர் இனத்தை; என்றும்
அயராமல் உழைத்திடவே வாரீர் வாரீர்! 14

முதலாளி

முதலாளி ஒருவன்தான் இந்த நாட்டில்
முழுமூச்சாய் உழைக்கின்றான்; முதலைச் சேர்த்து
முதலாளி ஆகின்றான்; பின்னே நின்று
முகம்காட்டி என்னபயன்? உழைப்ப தற்கு
முதலாக இருப்போர்கள் என்றும் வாழ்வில்
முன்னேற்றம் காண்பார்கள்; வீரத் தோடு
முதலாளி வாழ்கின்றான்; அவனுக் கின்று
முக்காடு போடுகிறீர்; முதலே போகும்! 15

அதிகாரிகள்

அதிகாரம் செய்யவெனப் பிறந்தோர் சில்லோர்;
அதிகாரம் இருந்தாலும் அடங்கி வாழ்வோர்
இதிகாச காலத்தில் இருந்தார் அன்றோ!
இந்நாளும் அவர்போலோர் இருக்கின் றார்கள்
அதிகாரம் இருந்தாலும் செலுத்த மாட்டார்
அறியாமல் செலுத்திடுவோர் பதவி போவார்
அதிகாரி கடமையினைச் செலுத்த லுற்றால்
அரசாங்கம் மக்களுக்கோர் அரணே அன்றோ! 16

மடிதட்டும் அதிகாரி நிறைந்து விட்டார்
மானமுடன் வாழ்வோர்கள் குறைந்து போனார்
அடிவருடிப் பிழைப்போரே யாண்டும் உள்ளார்
அதிகாரி கடமையினைக் காற்றில் விட்டார்
இடிமுழக்கம் செய்வோர்கள் எங்கே உள்ளார்?
யாமார்க்கும் குடியல்லோம் என்பார் யாரே?
குடிமக்கள் அனைவர்க்கும் நீதி கூறும்
குணமுள்ள அதிகாரி தோன்ற வேண்டும். 17

வணிகர்

பணிவுடையார், இன்சொல்லார்; முறுவலோடு
பகையாக யாரையுமே எண்ணா நல்லார்;
துணிவுடையார்; அரசுக்குக் காவலாளர்;
தொழிலாகக் காசுக்குத் தொண்டு செய்யும்
வணிகரெலாம் இந்நாளில் அரசுபோடும்
வரிகளிலே மிதிக்கின்றார் மீனாய்! அந்த
வணிகரது பண்புகளை வரையறுத்தால்
வார்த்தைகளும் உலகத்தில் இல்லையே றும்மே! 18

அமைச்சர்

அன்றெல்லாம் அமைச்சர்க்குத் தகுதி உண்டே!
அருங்குறளில் அதிகாரம் பலவு முண்டே!
இன்றெல்லாம் தகுதியினை எவரும் சொன்னல்
எது நடக்கும்? யாரறிவார்? முடிவென் னகும்?
குன்றெல்லாம் அமைச்சரென நின்ருர் முன்பு
குழியெல்லாம் அமைச்சரெனக் கூற லாமா?
நன்ருன அமைச்சரெலாம் கடமை ஓர்ந்து
நாட்டிற்கு நல்வழிகள் காட்டி வாழ்க! 19

அரசியல் கட்சிகள்

மக்களுக்குத் தொண்டு செயக் கட்சி உண்டு.
மாக்களென மாற்றுதற்குக் கட்சி ஏனே?
மக் களெலாம் மக்குகளாய் இருக்க வென்றே
மாருமல் கட்சி யெலாம் நடத்து கின்ருர்
பக்கபலம் இல்லாரும் கட்சி சேர்ந்து
பயமுறுத்து கின்ருர்கள் இதற்கா கட்சி?
சிக்கனமாய்க் கட்சிகளை நடத்த லுற்ருல்
தேர்தலுக்கே அஞ்சிடவும் தேவை இல்லை. 20

முடிப்புக் கவிதை

முன்னளில் நான்பயின்ற பள்ளியீது!
முதலாக எனக்கமைந்த செல்வ மீது!
பின்னளில் நான்வளர்ந்த காலை ஊன்றிப்
பேசவென வாய்ப்பளித்த சங்கமீது!
பொன்னளை அடுத்தாண்டு காணப்போகும்
புகழான வேளையிலே கடமை பற்றிப்
பண்ணலே பாடுகிருேம்; தலைய சைத்துப்
"பலேபலே" என் றுரைக்கின்ருேம் கடமை என்ன? 21

வருகின்ற பொன் விழாவை வாய்ப்பாய்க் கொண்டு
வளமான திட்டங்கள் பலவும் தீட்டி
உருவான பணிசெய்ய ஒன்ருய்க் கூடி
ஒப்பற்ற வெற்றியினைப் படைக்க வேண்டும்.
திருவுள்ளார் திறமுள்ளார் அறிவுள் ளார்கள்
தெளிவாகப் பணிசெய்யத் திரண்டு வாரீர்!
சிறுவன் நான் அழைக்கின்றேன் செவிசா யுங்கள்
செந்தமிழே! சரசுவதியே! காப்பாய் நன்றே! 22

நல்லதொரு கவியரங்கைப் நடத்தி நாட்டில்
நயமான சிந்தனையைத் தூண்டி விட்ட
வல்லவர்காள்! சங்கத்தீர்! உமக்கு நன்றி!
வளமான கவிபாடிக் கடமை சுட்டிப்
பொல்லாப்பு பெற்றவரே! கவிஞர் நல்லீர்!
போதனையை நிறுத்தாதீர்! தொடர்ந்து செல்வீர்!
நில்லாதீர் குடியரசை நிமிர்த்துமட்டும்
நிழலாகிப் பணிசெய்வீர் நிலைத்து வாழ்வீர்! 23

7. மண்

(காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரித் தமிழ் விழாவில் 23—1—71 அன்று திரு. க. தேசிகன் தலைமையில் பாடியது)

தலைவர்

பாவை விளையாட்டில் பயின்றுவந்த தலைவரிவர்
பூவை வெல்லுகின்ற புத்தமுதச் சொல்லாளர்!
கோவை நடத்துவதில் குணம்கண்ட பேராசன்
நாவை அசைத்ததனுல் நானிங்கே பாடுகிறேன். 1

கன்னியிலே கனி உண்டு
கல்வியிலே கல் உண்டு
மண்டையிலே மண் உண்டு
மந்திரியில் திரி உண்டு
கண்ணியிலே கண் உண்டு
கருத்தினிலே கரு உண்டு
தண்ணியிலே தணி உண்டு
பதவியிலே தவி உண்டு 2

மண் கூறுதல்

நான் கலந்தால் சேருவேன்
நான் தெளிந்தால் நீராவேன்
நான் திரிந்தால் மலையாவேன்
நான் பிளந்தால் கடலாவேன் 3

கடலெல்லாம் ஒருகையால் தாங்கு வேன்நான்
கனமலைகள் மறுகையால் ஏந்துவேன் நான்
உடலெல்லாம் உலகத்துக் கர்ப்ப ணிப்பேன்
உடலுக்குள் பொன்வைரம் பூட்டி நிற்பேன்
திடமாக என்உடலைத் தோண்டு வார்கள்
தேம்பாமல் பொறுமையுடன் தாங்குவேன் நான்
நடமாடும் இடமெல்லாம் உழுது செல்வர்
நான்வேர்ப்பேன் அவர்கட்கும் வேர்த்தேன்
ஆவேன் 4

பூதங்கள் ஐந்தினிலும் முதன்மை ஆவேன்
புண்ணியராம் சம்பந்தர் அப்பர் ஆனோர்
பாதங்கள் பட்டதனால் தலங்கள் ஆனேன்;
பண்டுமுதல் இன்றுவரை கருவி ஏந்தி
ஏதம்கொள் போர்செய்யக் களங்கள் ஆனேன்;
எந்நாளும் உழைப்போர்க்குப் பழங்கள் ஆனேன்;
சாதங்கள் வேண்டிடுவோர் இங்கே வாரீர்!
சஞ்சலங்கள் வேண்டிடுவோர் எங்கோ போவீர்! 5

பொன்னென்றும் கரியென்றும் வேற்றுமை இல்லை
ஆங்கு
போற்றியதைப் பேணுவதால் தொட்டிலும் நானே!
மன்னனுக்கும் மனிதனுக்கும் வேற்றுமை இல்லை-அவர்
மாண்டபினே என்மடிதான் கட்டிலும் நானே!
கண்ணென்றும் மணியென்றும் வேற்றுமையில்லை-
அதைக்
கரைப்பதனால் சோஷலிசக் கொட்டிலும் நானே!
பெண்ணாசை பொன்னாசை வேற்றுமையில்லை-அதில்
பிறளுபவர் சிரமறுக்கும் வீட்டிலும் நானே! 6

நிலத்தாலே வேற்றுமைகள் இருந்த போதும்
நிறத்தாலே வேற்றுமைகள் நெஞ்சில் இல்லை!

குலத்தார்கள் அனைவரையும் வாழ வைப்பேன்
கொஞ்சுபவர் அனைவரையும் மிஞ்ச வைப்பேன்!

பலத்தாலே எனைப்பறிக்க கிளர்ச்சி செய்வர்;
பணத்தாலே எனைமுடக்க முயற்சி செய்வர்;

நலத்தாலே நான்எவர்க்கும் குறைவு காட்டேன்
நலமறியார் புறம்போனார், புறம்போக் கென்றார் 7

மலையென்னும் மார்புண்டு; பூக்கா டென்னும்
மாண்பான குழலுண்டு; சூழ்ந்த முந்நீர்

அலைவீசும் துகிலுண்டு; வைரம் தங்கம்
அழகூட்டும் அணியுண்டு; நதிகள் என்னும்

உலையாத காலுண்டு; சுரங்கம் என்னும்
ஒப்பற்ற கையுண்டு; யாண்டும் ஓடும்

நிலையில் செந் நீருண்டு; விளைந்து தள்ளும்
நெஞ்சுண்டு; பூமாதா உவமை யானேன் 8

நீருக்கும் நெருப்புக்கும் உச்ச வரம்பில்லை—அந்த
நெடுங்கடலும் மலையினுக்கும் உச்ச வரம்பில்லை!

ஆறுக்கும் மலருக்கும் உச்ச வரம்பில்லை-இந்த
அடங்காத மனிதனுக்கும் உச்ச வரம்பில்லை!

சோறுக்கும் சுகத்துக்கும் உச்ச வரம்பில்லை—தினம்
சொல்லுகின்ற பேச்சுக்கும் உச்ச வரம்பில்லை!

பாருக்கும் நிலத்துக்கும் உச்ச வரம்பிட்டான்—எனைப்
பதவியுளார் அனைவருமே மிச்ச வரம்பிட்டார் 9

பெண்ணான எனக்காகச் சண்டை செய்து
பெரும்போரை நிகழ்த்தியவர் பலபேருண்டு

கண்ணான வெற்றியினைப் பெற்ற பேரும்
சதியின்றித் தோல்வியினை உற்ற பேரும்

மண்ணுக்குள் தான் போனார்; மறைத்து விட்டேன்!
மாதாவாய் ஆனவர்கள் பிறப்பிப் பார்கள்

பெண்ணொருத்தி நான் மட்டும் பிறப்பித் தங்கே
பின்னாளில் இறந்த பினும் உட்கொள் வேனே! 10

கட்டியென இருப்பேன் நான் காட்டில்—அங்கே
கல்லென்றே எனைஎறிந்து காய்கள் கொள்வர்

சட்டியென இருப்பேன் நான்வீட்டில்—அங்கே
சண்டைவரும் போதினையாள் கணவன் முன்னே

விட்டெறிவாள்; முட்டி நான் கலங்கிப் போவேன்
விளைகின்ற பூகம்பம் விட்டிலுண்டு!

சுட்டெரித்த சிவபெருமான் நெற்றிக் கண்ணைச்
சொல்லாமல் சில மாதர் கண்ணில் வைத்தான்! 11

கண்பட்ட போதெல்லாம் திட்டி சுற்றிக்
கடுகோடு மிளகாயும் மண் கலந்து

பண்பட்ட தாய்மார்கள் நெருப்பி னுள்ளே
பரிவோடு போடுவதைப் பார்த்தி ருப்பீர்

புண்பட்ட திட்டியெலாம் வெடித்துப் போகும்
புனிதமிகு மண் ஒன்றே வெடியா நிற்கும்

கண்பட்ட உலகத்துப் பொருள்க ளுள் ளே
கடைமட்டும் மிஞ்சுவது மண் ஒன்றேதான்! 12

சாகாத தன்மையினுல் இமயம் சென்ற
சரித்திரத்துக் குட்டுவனைக் கண்முன் கண்டேன்!
போகாத கண்ணகியும் மதுரை போகப்
புலம்பலுடன் அவள் பாதம் ஏந்தி நின்றேன்!
வேகாத கோவலனை எழவும் வைத்தேன்;
விளங்காத மதுரையினை அழவும் வைத்தேன்;
ஆகாத சூரரெலாம் கரையான் தின்ன
அடங்காத ஆசையினுல் சீர ணித்தேன்! 13

ஐவகையாய் நானுள்ளேன்; ஆட்சியாளர்
அனைவருக்கும் படியரிசி அளப்பவள் யான்!
பொய் வகையாய் வாழ்வோர்கள் மாண்டு போகப்
புலம்புகையில் பிடியரிசி கொடுப்பவள் யான்!
செய்வகையே அறியாமல் வறியன் என்றே
சிலையா ஞேர் தனைக் கண்டே சிரிப்ப வள்யான்
கைவகையாய் உழைப்போர்கள் அனைவ ருக்கும்
கருதறியாப் பெருஞ் செல்வம் விளைப்ப வள்யான் 14

தஞ்சையிலே சிரிக்கின்றேன்; அங்கே என்னைத்
தாலாட்டி வளர்க்கின்ருர்; கொஞ்சு கின்றேன்!
புஞ்சையெனக் கோவையிலே இருந்தேன்; அங்கே
புகழ்மிக்க பஞ்சாக்கிப் போட்டு விட்டார்!
பச்சையென முகவையிலே இருந்தேன்—என்னைப்
பாராட்டி அறிவூட்டிக் கல்வி கற்ற
மஞ்சமென அழகப்பன் செய்து விட்டான்!
மண்ணெல்லாம் உழைப்போர்க்கு மகிமைதானே? 15

8 மாணவர்

கண்டனூர் சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப்பள்ளிப் பழைய மாணவர் கழக ஆண்டுவிழாக் கவியரங்கில் 24-1-71 அன்று திரு. தேசிகன் தலைமையில் பாடியது)

உள்ளம் தமிழுக்கும் உணர்ச்சி கொடைக்கென்றும்
வள்ளல் வீரப்பர்; வாழுகின்ற பேரப்பர்
பள்ளிப் பருவத்தில் எனையிங்கே வளர்த்திலரேல்
துள்ளித் திரிவேனா? துடுக்கடக்கி வளர்வேனா?
நல்ல மாணாக்கன்! இப்பள்ளி பெற்றெடுத்த
வல்ல மாணாக்கன்; வார்த்தையினால் நன்றிசொலிப்
போகும் கவிஞனல; புனிதமிகும் இவ்வுடம்பு
வேகும் வேளையிலும் சிந்தையெலாம் இங்கேதான்!
ஆன்ற அறிவூட்டி அன்புடைய மொழியூட்டி
ஈன்ற பள்ளியிது! இங்கிருந்து புறப்பட்ட
வாய்க்கால் என்பதனால் வணங்குகிறேன் உங்கள்முன்
காய்க்கின்றேன் இங்கே கனிந்து! 1

மாணவர் நிலை

எழுத்தாளர் தொழிலாளி திரைப்ப டத்தார்
ஏற்றமுறும் அரசியலார் வணிகர் ஆனோர்
கொழுத்துத்தான் திரிகின்றார்; அவரை விட்டுக்
கொதிகலமாம் மாணவரை எனக்குத் தந்தார்
பழுத்தவர்கள் பிஞ்சினிலே மாணாக் கர்கள்!
பார்வைக்குப் பசுப்போல; பாய்ந்தால் வேங்கை!
விழுத்தாட்டிப் போடுவதில் வீரர்; தேர்தல்
வேளைதான் இவர்கட்கே உச்ச கட்டம் 2

படிப்பொன்றில் இவர் துறவி; மீதிவேலை
பார்ப்பதிலே இவர்கட்கோ இணையே இல்லை
துடிப்பாகப் பேசுவதில் இவர்முன் யாரும்
துரும்பாவர்; ஆசானைக் கேட்டுப்பாரும்!
நடிப்பதிலும் வல்லாளர்; கேள்வி கேட்டால்
நயமாக அதைத் திருப்பி எழுதித் தானே
மடிப்பதிலும் வல்லாளர்; இவர்கள் முன்னே
மரமென்ன, மண்கூட வாயை மூடும்! 3

நீங்களெலாம் படிப்பதேன் என்று கேட்டேன்;
நிமிர்ந்தொருவன் "வேலைக்கே" என்று சொன்னான்
பாங்காக மற்றொருவன் "வேலை யின்றிப்
படிக்கின்றேன்" என்றென்னைப்பார்த்துச்சொன்னான்
தாங்காமல் அடுத்தொருவன் தன்னைக் கேட்டேன்
"நானெங்கே படிக்கின்றேன்' 'என்று கேட்டான்;
'போங்களடா' எனச்சொல்லி வேலை விட்டுப்
புறப்பட்டேன்; கலைமகளும் புறப்பட் டாளே! 4

பள்ளியிலே கரும்பலகை, ஆச னங்கள்
படம்காட்டும் கருவியுடன் புத்த கங்கள்
உள்ளனவே; வேளையெலாம் நேரம் காட்டி
உழையாமல் மணியடிக்க ஆளும் உண்டு
கள்ளமிலா நெஞ்சுடனே பாடம் சொல்லக்
கனிவுடைய ஆசானும் பலபேர் உண்டு
வெள்ளமென இத்தனையும் இருந்தும் அங்கே
விதிவசத்தால் மாணக்கன் ஒருவன் இல்லை! 5

மாணவர்கள் படிக்கும்முறை

பந்தடிக்கும் நேரத்தில் பாட்டுப் பாடி
பாடுகின்ற நேரத்தில் ஏட்டைத் தேடி

சிந்திக்கும் நேரத்தில் பந்த டித்துச்
சிரிக்கின்ற நேரத்தில் தூங்கி விட்டுச்

சொந்தமெனும் புத்தகங்கள் விற்று விட்டு
சொகுசாகக் கொட்டகையைச் சுற்றிவிட்டு

தந்தினத்தோம் போடுகின்ருர் தேர்வு வந்தால்
ததிங்கினத்தோம் போடுகின்ருர் அரசாங் கத்தார்! 6

"இந்தியையே ஒழியுங்கள்" என்று சொன்ஞர்
எடுத்திட்டார் இந்தியையே பாடம் விட்டே!

அந்தியிலே சிலபேர்கள் ஒன்ருய்க் கூடி
ஆங்கிலத்தை எடுமென்ருர்; சிலபேர் இன்று

தந்திரமாய் ஊருக்கூர் கூடி நந்தம்
தமிழையுமே எடுங்களெனத் தாளம் போட்டார்

சந்தையெனப் பள்ளியினை ஆக்கி விட்டார்
சரியான மடாதிபதி மாணுக் கர்கள் 7

படிப்பில்லை பயமில்லை தேர்வு மில்லை
பணமெதுவும் கட்டிடவும் தேவை இல்லை

அடிப்பதற்கும் ஆளில்லை; பிரம்பு மில்லை
அதிகாரம் எவர்கையில்? தெரிய வில்லை

பொடிப்பயலும் ஆசானை வகுப்பில் பார்த்துப்
போதும் எனச் சொன்ஞனேல் பாடம் நிற்கும்

வெடிப்பயல்கள் சிலபேர்கள் படுத்தும் பாடு
வியாதியுமே படுத்தாது நரகக் கேடு! 8

விளையாட்டுப் பிள்ளைகளே மாணாக் கர்கள்!
விதிவசத்தால் சிலபேர்கள் தேறு வார்கள்!

சளையாமல் சிலபேர்கள் படித்தி ருந்தும்
சதிபோலத் தேர்வினிலே தோற்றுப் போவர்!

தலைகூடப் பள்ளியிலே காட்டா தாரும்
தலைவைத்துப் படுக்காதார் சிலரும் கூட

சுளையாகத் தேர்வினிலே மதிப்பெண் பெற்றுச்
சூட்சுமமாய்த் தேறுகிறார்! விதியின் கூற்றே! 9

மாணாக்கர் முன்னாளில் அனைவ ருக்கும்
மண்டியிட்டுக் கிடந்ததற்குப் பரிகா ரம்மாய்த்

தூணாக்கி விட்டார்கள் தலைவ ரென்றே!
துரும்பாகிப் போனார்கள் ஆசான் மார்கள்!

மாணாக்கர் நினைத்தாரேல் ஆசான் என்ன?
மந்திரியும் எந்திரிதான்! போலீஸ் காரன்

மாணாக்கர் தலைகண்டால் தொப்பி தன்னை
மடியினுக்குள் ஒளிக்கின்றான்; சலாம்செய் கின்றான்

"ஒழிக" என முழங்கிடுவர்; பள்ளி முன்னே
ஒன்றாகக் கூடிடுவர்; சாலை செல்லும்

வழிகளெலாம் அடைத்திடுவர்; வண்டி எல்லாம்
வாய்க்கு வந்த வார்த்தைகளை வரைந்து செல்வர்

புலிகளென உண்டியலை ஏந்தி நிற்பர்;
போட்டவரை "ஒழிமுழக்கம்" போட வைத்து

வழிவிடுவர்; காரெல்லாம் தாறுமாறாய்
வரைபடங்கள் போட்டிடுவர், வயிறுமுட்டும்! 11

மந்திரமாய்ச் சிலவார்த்தை அறிந்து கொண்டு
மாமேதை ஆனவர்கள் சிலமா ணுக்கர்!
"எந்திரமா நாங்களெலாம்" "மன்னிப்புக் கேள்"
"எழுந்துபோ" "வாய்மூடு" "வாபஸ் வாங்கு"
"சிந்தியுங்கள்" "ஒத்திவை" "ஒழிக" "வாழ்க!"
செயலாற்றல் மிக்குடைய மாணுக் கர்கள்
சந்தியிலே இதைப்பாடம் நடத்துகின்ருர்
சரிகின்ருர் மற்ருேரும் இவரைப் பார்த்து 12

தேர்தலுக்கு வேலைசெய ஆட்கள் தேவை;
தெளிவுடைய அரசியலார் பார்வை எல்லாம்
கார்களிலே இருந்தாலும், மாணுக் கர்தம்
கால்களிலே கிடக்கின்ற காட்சி கண்டோம்!
கார்களுக்கு மண் எண்ணெய் போல இந்தக்
கால்களுக்குத் தேநீரை ஊற்றிவிட்டுப்
பார்புகழும் பதவியிலே ஓங்கு கின்ருர்
பரீட்சையினை விட்டவர்கள் தொங்கு கின்ருர். 13

அரக்கரினை முன்ளுளில் அழித்தோ ரெல்லாம்
அனைவருமே மாணுக்கர் உணர்ந்து பாரீர்!
இரக்கமிலா அசுரனையே முருகன் கொன்ருன்
இரணியனைப் பிரகலதன் இனிது கொன்ருன்
அரக்கனெனும் இட்லரையும் அழித்த சக்தி
அணுசக்தி என்பதையும் மறந்தா போனீர்?
உறக்க மிலாத் தேர்தலிலே வெற்றி கொள்ள
உழைத்ததுவும் மாணுக்கர்சக்தி யன்ருே! 14

தலைவரெலாம் மாணாக்கர் முன்னே இன்று
தனதானே! தனதானை என்கின்றார்கள்
விலையில்லா மாணாக்கர் ஒன்று சேர்ந்தால்
வெற்றியெலாம் அவர் வழியில் விளைந்திடாதோ!
அலையில்லா மாணாக்கர் அலைக ளானார்
அவர்மீதே கப்பலிலே மிதக்கின்றார்கள்
நிலையில்லா அரசியலார்! கல்விக்கூடம்
நெடுங்காலம் ஆயிற்று பாழாய்ப் போயே! 15

படிப்போரும் சிலபேர்கள் இருக்கின்றார்கள்
பட்டாளம் நடத்துவோரும் இருக்கின்றார்கள்
துடிப்பான இளைஞரெலாம் ஒன்று சேர்ந்து
தொழிலொன்றே கற்பதென சபதம் கொண்டு
நடிப்பாரைப் புறமிட்டுப் புதைத்து விட்டு
நடந்தாரேல் அவர்கையில் நாடு மிஞ்சும்
வெடிப்பாகத் திகழுங்கள் தீமை கண்டால்
விழிப்பாக வாழுங்கள் பகைமை கண்டால் 16

நாடெல்லாம் அவர்கடமை தேர்தல் அல்ல!
நயமான சொல்வன்மை பெற்று நித்தம்
ஏடெல்லாம் எழுதுங்கள்; மொழியைக் கற்றே
ஏற்றமெலாம் கொள்ளுங்கள்; பெற்றோர்ப் பேணி
வீடெல்லாம் காவுங்கள்; விளக்காய் நிற்பீர்!
விளையாட்டில் முன்னேறி, விஞ்ஞானத்தும்
ஈடெல்லாம் இல்லாமல் வெற்றி கொள்வீர்!
இயல்பாகப் படியுங்கள் சுற்றி வாழ்வீர்! 17

ஆசான்கள் அனைவரையும் வணங்க வேண்டும்
அருமையுடன் பெற்றோரைப் பணிய வேண்டும்

ஏசாமல் அனைவரையும் போற்ற வேண்டும்
எனைத்தானும் நல்லவைகள் கற்க வேண்டும்

காசாக வாழ்வெல்லாம் செல்ல வேண்டும்
கருத்தாக முயற்சியிலே வெல்ல வேண்டும்

தூசாக இல்லாமல், தேசத் துக்குத்
துணையாக இருப்பதுவே கடமை ஆகும் 18

அறமொழிகள் இனிமேலும் சொல்வேன் ஆனால்
அரசியலார் விடுவாரோ? விட்டால் அன்னார்

திறமெல்லாம் என்னாகும்? தேர்தல் நேரம்!
தெரியாமல் இன்றிங்கே வந்து விட்டேன்

உரமாகத் திகழ்கின்றார் மாணாக் கர்கள்;
உலைவைக்கத் திரிகின்றார் சிலகூட் டத்தார்!

தரமாக இனிநானும் கவிதை சொன்னால்
தலை உடையும் முன்னே நான் ஓடுவேனே! 19

9. ஊக்கம்

(கோழச்சிவல்பட்டி தமிழ்விழாவில் 18—1—70 அன்று
திரு. முடியரசன் தலைமையில் பாடியது)

நல்ல கவியரங்கின் நயமான பெருந்தலைவ!
வல்ல பெருங்கவிதை வடிக்கின்ற பாவலர்காள்!

சூழ வீற்றிருக்கும் சிவல்பட்டிப் பேரவையீர்!
வாழ வழிகாட்டும் வள்ளுவனின் வழிவந்தீர்!

உங்கள் அனைவர்க்கும் உளமார்ந்த நல்வணக்கம்!
தங்கத் தமிழன்னை நல்லடிக்கென் கைகூப்பு!

சொத்துடைமை பாவமெனச் சொல்கின்ற நேரத்தில்
பத்துடைமை வள்ளுவனைப் பாடுகின்றோம் வேர்க்காதீர்

உடைமை அனைத்தையுமே உடைக்கின்ற வேளையிது!
கடைமை ஆனவரைக் கைதூக்கும் நேரமிது!

காலம் மாறுகின்ற காலத்தில் வள்ளுவனைக்
கோலம் செய்திங்கே கூட்டுகின்றோம் பலவாறாய்

அன்பு முதலாக அறியாத நாணீறாய்
இன்று பாடுகின்ற இவ்வரங்கில் ஊக்கத்தை

நின்று நான்பாட நேர்ந்துள்ளேன்; ஆதலினால்
குன்றும் ஊக்கத்தைக் குன்றாது கூறுகிறேன்

தேர்வில் தோற்றதனால் தேன்உள்ளம் வாடிவரும்
சோர்ந்த மாணவர்க்கே ஊக்கத்தை ஊட்டுவதால்

என்னை அழைத்திங்கே இதைப்பாடச் சொன்னாரோ?
என்னை ஊக்குவிக்க இதைப்பாடத் தந்தாரோ?

ஊக்கம் வேண்டுமென உரைக்கின்றார் வள்ளுவனார்
ஊக்கம் "கம்என்றே" உட்கார்ந்த வேளையிது;

கடின மாய்உழைக்கக் காட்டுகிறார் வள்ளுவனார்!
நளின மாய்வாழ நாடுகிறார் நம்மக்கள்!!

காட்டைப் படைத்தான் கடவுளவன்; எழுதுகடன்
சீட்டைப் படைத்தான் செயல்மனிதன்; காடுழவே

மாட்டைப் படைத்தான் மகேசன்; நம்மனிதன்
பூட்டைப் படைத்தான்; புனைத்தைப் பாழாக்கித்

தின்று கொழுக்கும் சோம்பேறிக் கூட்டத்தால்
கன்று பாழாகும் காட்சிதான் மிச்சமடா!

தானம் தருகின்றார் எனும்சொல்லைக் கேட்டதுமே
மானம் இழந்த பக்களை நாம் வரிசையிலே

நாளும் காண்கின்றோம்; நமதருமை வள்ளுவனைப்
பாழும் பூமியிலே பதறுக்கிப் போடுகிறார்.

தருமம் செயவிழைவோர் பெறுவோரைக் காணுமல்
குறுகும் நிலையுற்றால் குவலயத்தில் அந்நாடே

ஊக்கம் நிறைந்ததென உணர்ந்திடலாம்; வையத்தில்
ஆக்கம் பலநிறைந்த அனைத்துலக நாடுகளும்

அறங்கள் செய்யவென அடிவைத்தால் தட்டேந்திக்
கரங்கள் நீட்டுகின்ற கைராசி நம்ராசி!

பச்சைத் தமிழினத்தைப் படைத்திட்ட நல்லிறைவன்
பிச்சை எடுக்கின்ற புத்தியையும் ஏன்படைத்தான்?

கையைப் படைத்தான் கடவுளோ உழைக்கவென;
பையைப் படைத்தான் பதருகிப் போனமகன்!

சேர்த்து வைத்ததனால் செல்வங்கள் ஒருபக்கம்;
பார்த்து வயிறெரியப் பதறெல்லாம் மறுபக்கம்!

உடலில் உயிரிருந்தும் உள்ளத்தில் ஊக்கமில்லை;
கடலில் நீரிருந்தும் கைவைப்பார் இன்மைபோல்!

இந்த நாடென்ன இயற்கையிலே பாழ்பட்ட
அந்த நாடா! அடிப்படையைப் பாருங்கள்,

நிலத்தில் பழுதுண்டா? நீள்நிலத்தைச் சுற்றுகடல்
வளத்தில் பழுதுண்டா? வானத்தில் பொய்யுண்டா?

ஆற்றில் குறையுண்டா? அருவியிலே குறைவுண்டா?
சேற்றில் குறைவுண்டா? செந்தமிழில் குறைவுண்டா?

மனத்தில் ஊக்கமிலா மக்களாய் இருந்ததனுல்
இனத்தில் தாழ்வுற்ருேம்; எழுச்சியினை நாம்இழந்தோம்

வான முழுநிலவில் அமெரிக்கர் கால்வைத்தார்
ஈனச் சிதறுகாயில் இன்னும்நாம் கைவைத்தோம்.

சாதி அடிப்படையில் சரிந்திருக்கும் உள்ளங்கள்!
பாதி வறுமையிலே பாழ்பட்ட உள்ளங்கள்!

கல்வி அறியாது கடைகெட்ட உள்ளங்கள்
எள்ளல் அனைத்துக்கும் இலக்கான உள்ளங்கள்

நாட்டில் பலகோடி; நாட்டையே ஆட்டுவிக்கும்
சாட்டை சிலரிடத்தில்; சரித்திரத்தை உணருங்கள்

வீழ்ந்த உள்ளங்கள் விழித்தெழவே வள்ளுவனுர்
ஆழ்ந்த புலமையினுல் ஊக்கத்தை உளமென்ருர்

உலையா ஊக்கத்தை உடையதனுல் அமெரிக்கர்
தலையாய் வாழ்கின்ருர்; தரித்திரமே நமதுவிதி!

ஊக்கம் உடையார்முன் தலைவிதியும் தோலுரியும்
ஆக்கம் தானுக வழிதேடிச் சரணடையும்.

படிப்புப் படித்தபினர் வேலைக்கு மனுப்போட்டுத்
துடிப்பை இழந்தோரால் நாடெங்கு முன்னேறும்!

சொந்தத் தொழிலாக்கிச் சுயநலத்தைப் புறமாக்கிக்
கந்தைத் துணிகட்டும் காட்சியிலும் கலங்காமல்

ஊக்கம் ஒன்றினையே உரமாக்கி அஞ்சாமல்
ஆக்கம் தனைநாடி அயராமல் உழைத்திட்டால்

செல்வம் வழிகேட்கும்; சிறப்பெல்லாம் கைகட்டும்;
அல்லும் பகலெல்லாம் பட்டங்கள் தேடிவரும்,

பெரியோன் என்பார்கள்; அவதாரம் என்பார்கள்;
அறியாப் பதவியெலாம் சூட்டியே மகிழ்வார்கள்

உடலில் உயிரிருந்தும் ஊக்கமது தானின்றேல்
ஜடமும் மரமும்தான் அவருக்குச் சமமென்பார்.

ஊக்கம் இல்லாதார் உடம்பென்ன பெரிதானும்
தூக்கக் கனவுக்கும் துடிதெழுந்தே அஞ்சிடுவர்.

தாக்கும் சிறுபுலிக்குத் தசையாடும் யானைஅவர்!
ஏக்கம் ஒன்றேதான் அவர்வாழ்வில் எச்சமடா!

வெள்ளத் தனைய மலர்நீட்டம் என்பதுபோல்
உள்ளத் தனைய ஊக்கத்துக் குயர்வுண்டோ?

ஊக்கம் இழந்தோர்க்கே ஒருரூபாய் டிக்கட்டு!
ஊக்கம் உடையோர்க்கோ உழைப்பேதான் படிக்கட்டு!

வேலை யுடன் ஊக்கம் இன்மையினால் நம்கல்விச்
சாலை அனைத்திலுமே பிள்ளைகளே மாமியார்!

அழியாத பணியாற்றும் தொழிற்சாலை அனைத்திலுமே
தொழிலாளி முதலாளி தமக்குள்ளே நாத்தனார்!

நாட்டின் அழிவுக்கும் நல்வாழ்வின் அழிவுக்கும்
கேட்டைத் தருவதுவே கீழான சோம்பலடா!

சோம்பல் அழித்துச் சூடான ஊக்கமுடன்
தேம்பல் அழிக்கத் திருநாட்டீர்! புறப்படுவீர்!

ஊக்கம் பெறுவீர் உழைப்பீர் விடை தருவீர்!
தூக்கம் முடிப்பீர்; துணிந்து!

10 ஆங்கிலம்

திருப்பத்தூர் C. T. C. & பொன்முடி பதிப்பகக் கிளைகள்
திறப்புவிழாக் கவியரங்கில் 6—1—71 அன்று
திரு S. மெய்யப்பன் B. A., B. L. (முன்னாள் M. L. A.
தலைமையில் பாடியது)

பண்பட்ட கவியரங்கத் தலைவர் ஏறே!
பாவலர்காள்! பெரியோரே! விழாவைக் காண
எண்பட்ட நெஞ்சத்தால் இங்கே வந்தீர்!
எல்லோர்க்கும் கைகூப்பி நன்றி சொல்வேன்
புண்பட்ட நெஞ்சத்தால் பாடு கின்றேன்
புகழ்மிக்க ஆங்கிலத்தைப் புறக்க ணித்தால்
மண்பட்டுப் போகாதோ? உலகி லுள்ள
மதிபட்டுப் போகாதோ? சிந்திப் பீரே! 1

அறிவிற்கோர் சுரங்கமென விளங்கும் அன்னை
அறிவியலில் மணிமுடியாய் விளங்கும் மாதா
செறிவிற்கோர் இலக்கியங்கள் பூத்த பூங்கா!
ஷேக்ஸ்பியரால் உலகமெலாம் மணக்கும் ரோஜா!
விரிவிற்கோ அண்டமெலாம் எல்லை கொண்டாள்
விளங்காத பிண்டமெலாம் வீழ்த்தி வென்றாள்
பரிவிற்கோ நெஞ்சமெலாம் அடிமை கொண்டாள்
பாராண்ட தன்மையினால் தலைமை பூண்டாள். 2

ஷெல்லியையே கண்களெனப் பெற்ற பிள்ளை
ஷேக்ஸ்பியரை இதயமெனப் பெற்ற கிள்ளை
வெல்லமெனும் மில்டனையே நெற்றி கொண்டாள்
வெற்றிமிகு பைரனையே திலகம் பூண்டாள்

சொல்லிலுயர் வேர்ட்ஸ்வொர்த்தை நாவாய்க்
கொண்டாள்
சுவைமிக்க கோல்ரிட்ஜைக் கரமாய்க் 'கொண்டாள்
நல்லவராம் வால்ட்டர்ஸ்காட் காலாய்ப் பெற்ருள்
நாடெல்லாம் நடக்கின்ருள் ஆங்கி லத்தாய்! 3

கடலெல்லாம் முன்ளுளில் கடந்து வந்தாள்
கரமெல்லாம் செங்கோலே ஏந்தி வென்ருள்
திடமாக இன்றைக்கோ வான மெல்லாம்
தெருவாக ராக்கெட்டில் சுற்று கின்ருள்
மடமாக இருக்கின்ற நாட்டி னர்க்கு
மதியாக ஒளிவீசி மயக்கு கின்ருள்
வடமாகப் பிடித்தோர்கள்அனேவ ரும்மே
வலமாக வந்து தொழத் தேராய் நின்ருள் 4

பேர்அரசை இழந்தாலும் இழப்போம் அன்றிப்
பெறலரிய ஆங்கிலத்தை இழவோம் என்றே
மார்தட்டிப் புலவோர்கள் கூறு மாறு
மணிமுடியாய் விளங்குகிருள் மொழிகள் முன்னே!
நீர்கெட்டுப் போனுலும் போகும், நல்ல
நிலம்கெட்டுப் போனுலும் போகும்; மாந்தர்
சீர்கெட்டுப் போனுலும் போகும், ஆனல்
சிறிதளவும் கெடமாட்டாள் ஆங்கி லத்தாய்! 5

ஆங்கிலத்தைக் கல்லாதார் வேண்டா மென்பார்
அதன்நயத்தை அறியாத அறிவி னேர்கள்!
ஆங்கிலத்தைக் கற்றிருந்தும் வேண்டா மென்பார்
அரசியலில் இலாபத்தைக் கருது வோர்கள்

ஆங்கிலத்தால் வாழ்ந்திருந்தும் வேண்டா மென்போர்
அனைவரையும் ஏமாற்றும் சூழ்ச்சிக் காரர்!
ஆங்கிலத்தால் உலகத்தை வெல்ல லாகும்
ஆங்கிலமேல் உலகத்தின் கதிஎன் னகும்? 6

ஆங்கிலமோ தமிழுக்கோர் எதிரி யல்ல
அரசாளும் உரிமைக்குப் போட்டி யல்ல
பாங்குடனே தமிழுக்குச் சேவை செய்வாள்
"பதமாக" அறிவியலில் பாடம் சொல்வாள்
ஓங்குயரும் சட்டமெலாம் உரைத்து நிற்பாள்
ஒப்பற்ற தொழில்நுட்பம் உணர்த்தி வெல்வாள்
பாங்குடனே ஆங்கிலத்தைக் கற்ற பேர்கள்
பாராளும் நாயகராய்ப் பவனி கொள்வர் 7

பள்ளியிலே மாணுக்கர் பலபேர் இன்று
படையெடுப்ப தெல்லாமே ஆங்கிலம்தான்!
உள்ளமெலாம் தமிழுக்கே என்போர் கூட
உட்கார்ந்து போகின்ருர் தமிழ்ப்பா டத்தில்!
பள்ளியிலே தூங்கிடுவோர் முன்னே எந்தப்
பாடம்தான் சுவையாக இருப்ப துண்டு?
கள்ளமிலா உள்ளத்தில் மொழிப்போ ராட்டம்
கடுகளவு விதைத்தாலும் அறிவே நாசம்! 8

ஆங்கிலமே இந்தியர்கள் உறவுப் பாலம்!
அனைத்துலக மக்களுக்கும் தொடர்புக் கூடம்!
ஆங்கிலமே அறிவியலின் காம தேனு!
ஆதலினல் ஆங்கிலத்தைப் புறக்க ணித்துத்

தேங்கிடவே மக்களெலாம் விரும்ப வில்லை.
தெளிவாக ஆங்கிலத்தைப் பயில வேண்டும்.
ஓங்கிடவே வாழ்க்கையிலே விரும்பு வோர்கள்
உண்மையிலே ஆங்கிலத்தை உணர வேண்டும். 9

தமிழகத்துப் பள்ளியுடன் கல்லூ ரிக்குள்
தமிழுடனே ஆங்கிலமும் கொலுவி ருக்கும்
அமிழ்தான காட்சியினைக் காணு கின்றோம்
ஆங்கிலத்தை வீழ்த்துவதால் நாடே வீழும்!
இமிழ்கடல்சூழ் வையத்தில் தமிழுக் கென்றும்
இணையான நல்லமொழி ஆங்கி லம்தான்;
தமிழகத்தீர் மாணவர்காள்! ஆங்கி லத்தைத்
தரமாகக் கற்றுயர்வீர்! வணக்கம் நன்றி 10

நல்லதொரு கவியரங்கத் தலைமை ஏற்று
நறுங்கவிதை முதன்முதலாய்த் தந்த சான்றோன்
வல்லவராம் மெய்யப்பக் கவிக்கு நன்றி!
வந்திங்கே கவிபாடிச் சிறப்புச் செய்த
பொல்லாத இக்கவிஞர் அனைவ ருக்கும்
பொருத்தமுறச் சொல்லாலே நன்றி சொன்னேன்
நல்லோராய் இவண்வந்த அவையி னோர்க்கும்
நன்றியுடன் வணக்கங்கள் படைத்தேன் ஏற்பீர்! 11

11 குடும்பம்

வேந்தன்பட்டி இளைஞர்மன்ற வைகாசி விசாக விழாவில் 7-6-71 அன்று நடைபெற்ற கவியரங்கில் தலைமைதாங்கிப் பாடியது

நல்லதொரு கவியரங்கை வேந்தன் பட்டி
    நகரத்தில் நடத்துகின்ற நண்பர் நல்லீர்!
வல்லவராம் அருங்கவிஞர் ஐவர் ஈண்டு
    வாய்ப்பாகக் குடும்பத்தை வாழ்த்திப் பாட
வெல்லமொழிக் கவிகேட்டு மகிழ வந்த
    வெற்றிமிகு பேரவையீர்! உங்கட் கென்றன்
சொல்லிலுயர் தமிழாலே நன்றி சொல்லித்
    தொடங்குகிறேன் என்கவிதை வணக்கம் ஏற்பீர்! 1

பொல்லாத குடும்பத்தை அரங்கி லேற்றப்
    புகழ்மிக்க கவிஞரிவர் துடிக்கின் றார்கள்.
இல்லாத நிலையினையே இயம்ப மாட்டார்.
    இருக்கின்ற குறைகளையத் தயங்க மாட்டார்.
கல்லாத பெண்களினால் குடும்பம் காணும்
    காட்சிகளை சடங்குகளைக் கவியில் சொல்வார்;
சொல்லாத பொருளில்லை என்னு மாறு
    சுவைமிக்க காட்சிகளைச் சிலேடை செய்வர். 2

குடும்பத்தில் தாயுண்டு தந்தை யுண்டு.
    குலம்வளரப் பிள்ளைகளும் நிறைய உண்டு.
குடும்பத்தில் தலைவன்யார்? என்று கேட்டால்
    "கொஞ்சமிரு; மனைவியைநான் கேட்டுச்
                                        சொல்வேன்"

குடும்பத்தில் இதனால்ஏன் தகரா" றென்று
குணமாகப் பதில்சொல்லும் மனித ருண்டு.
குடும்பத்தைத் தலைவன்தான் நடத்த வேண்டும்.
குடும்பங்கள் தாமாக நடக்கு தின்று! 3

தாய்சொல்லைத் தட்டாதே என்றார் முன்பு!
தாய்பல்லைத் தட்டாமல் இருந்தால் போதும்!
பேய்போலத் திகழ்கின்ற பெண்க ளுண்டு
பிசாசுகளாய் விளங்குகின்ற பிள்ளை உண்டு
நாய்போலக் கடிக்கின்ற கணவ ருண்டு
நாதியற்றுக் கிடக்கின்ற குடும்ப முண்டு
சேய்இன்றித் துடிக்கின்ற குடும்ப முண்டு
சேய்பெற்றுத் துடிக்கின்ற சிலவு முண்டு 4

செலவுக்குக் கணவனிடம் பணத்தை வாங்கிச்
சிறுவாடு சேர்க்கின்ற மனைவி உண்டு.
செலவுக்கு மனைவியிடம் பணத்தை வாங்கிச்
சீட்டாடித் தொலைக்கின்ற கணவன் உண்டு.
மலருக்கு மணமாக விளங்கி டாமல்
மலருக்குப் பூச்சியென விளங்கு கின்றார்!
பலருக்குக் குடும்பமதே பார மாச்சு!
பகைகூட அதற்குள்ளே வளர லாச்சு! 5

ஒருவீட்டில் வாழ்கின்ற உறவி னோரும்
ஒருகாட்டில் வாழ்வோராய் உலவு கின்றார்.
ஒருவீட்டில் திருமணம்நான் சொல்லப் போனேன்
உட்கார்ந்தே இருக்கின்ற ஒருவர் என்னை

மெருகூட்டி வரவேற்ருர்; வீட்டி லுள்ள
மேல்பக்கத் தார்பற்றி விசாரித் தேன்நான்
தெருகாட்டிப் போய்விட்டார்; பேச வில்லை.
திகழ்கின்ருர் ஒற்றுமையாய் இவ்வா றங்கே! 6

திருமணங்கள் பலஇங்கே காணு கின்ருேம்
திரளான பேர்வருவார் சாப்பாட்டுக்கு!
வருவாயே இல்லாரும் வீட்டை விற்று
வளமான திருமணங்கள் செய்கின்ருர்கள்
உருவாகும் புதியதொரு குடும்பத் தாலே
உட்காரும் தாய்க்குடும்பம்! ஒழிந்தே போகும்!
வருமானம் அறியாமல் சடங்கின் பேரால்
வகைகெட்டுக் குடும்பங்கள் அழியலாமா! 7

பெருமையுடன் திருமணத்தில் சீர்வைக் கின்ருர்;
பித்தளைகள் முதலாகத் தங்கம் வைரம்
அருமையுடன் சேகரித்துப் பரப்பு கின்ருர்
ஆனுலும் கடைசிவரை குறையே மிச்சம்!
ஒருசட்டி முறைகொடுக்க வாங்கு வார்கள்;
உடனேஓர் கிழவிஅதைச் சிறிதே என்ன
மறுசட்டி வாங்கிடுவார்; இவ்வா றந்த
மணமுடியும் வரைஎல்லாம் இரட்டிப் பாகும் 8

இறுதியிலே கணக்கெடுத்துப் பார்க்கும் போது
ஏட்டினிலே கடன்ஒன்றே எஞ்சி நிற்கும்!
உறுதியுடன் இம்முறைகள் ஒழிக்கா விட்டால்
உள்ளசில குடும்பமெலாம் ஒழிந்தே போகும்

அறுதியிட்டுச் சொல்லுகிறேன் முறைகள் பேரால்
அழிந்தபல குடும்பங்கள் ஊர்கள் சொல்லும்
கருதியிதைப் பாருங்கள்! காவே ரிக்குக்
கரையணைகள் இல்லைஎன்றால் நீரா மிஞ்சும்? 9

வானத்தை மறைத்தாலும் ஒளியின் கீற்றை
வையத்தில் மறைப்பார்கள் யாரு முண்டோ?
தானத்தை மறைத்தாலும் புகழின் கீற்றை
தமிழ்ஏட்டில் மறைப்பார்கள் யாரும் உண்டோ?
கானத்தை மறைத்தாலும் குயிலின் பாட்டைக்
கணநேரம் தடுப்பார்கள் யாரும் உண்டோ?
ஈனத்தைச் சமுதாயம் மறைத்த போதும்
இசைக்கவிஞர் குரல்மறைக்க யாரால் கூடும்? 10

நாட்டகத்துக் குடும்பத்துத் தன்மை எல்லாம்
நலமான சிந்தனையில் ஊற வைத்துப்
பாட்டகத்தில் வைத்துள்ளார். இவர்க ளுக்குப்
பரிசென்ன தருவீர்கள்? வாழ்ந்தால் போதும்.
கூட்டகத்தில் வாழ்கின்ற மக்கள் தம்மைக்
குடும்பமெனும் கோபுரத்தில் ஏற்ற வேண்டி
ஏட்டகத்துப் பாவல்லார் வருகின் றார்கள்
இறுதிவரை இருந்துகவி கேட்பீர் நன்றே! 11

மாமனார்

மாமனார் எனும்பெயரைக் கேட்ட போதே
மருமகனார் அனைவர்க்கும் மகிழ்ச்சி தானே!
சேமமுற மருமக்கள் வாழ வேண்டின்
சிறப்புள்ள மாமனவன் பொருளைத் தேடி

ஏமமுற வாழாமல் தினமும் சேர்த்தே
ஏக்கமுடன் செத்திடவும் வேண்டும் வேண்டும்!
நாமமது மாமனூர்க் கென்றே சொல்வேன்
நலிகின்றார் அனைவருமே மாமன் தானே! 12

மாமியார்

மாமியார் தனை நம்பி இந்த நாட்டில்
மாறாமல் வாழ்ந்ததனால் சோம்ப லாகிச்
சாமியார் ஆனவர்கள் பலபேர் உண்டு
சரியான சாமியார் சிலபேர் இந்தப்
பூமியிலே மாமியார் பெற்றுள் ளார்கள்
பொழுதெல்லாம் மருமகளைச் சிலேடை பேசி
மாமியார் வாழ்வதுவே தொழிலா யிற்று!
மருமகளும் ஒருநாளில் மாமி தானே! 13

மாப்பிள்ளை

கெடிகாரம், சங்கிலிகள், மோதி ரங்கள்
கெடுதலிலா வானொலிகள், சைக்கிள், சட்டை.
ஓடியாத மேஜையுடன் சவரக் கத்தி
உட்கார நாற்காலி வேண்டு வோர்கள்
கடிதாக மாப்பிள்ளை ஆக வேண்டும்!
கண்டாங்கி ஒன்றேதான் அவருக் கில்லை!
படியாத மாப்பிளைக்கும் விலைகள் உண்டு!
பதருக இருந்தாலும் மாப்பிள் ளைதான்! 14

மருமகள்

சீர்கொண்டு வருவதனால் மாட்சி பெற்று
சினம்கொண்டு வருவதனால் ஆட்சி பெற்று
தார்கொண்டு வருவதனால் தலைமை பெற்று
தரம்கொண்டு வருவதனால் உரிமை பெற்று

மார்கொண்டு வருவதனால் மகிமை பெற்று
மனம்கொண்டு வருவதனால் வளமை பெற்றும்
பேர்கொண்டு வருபவளே மருகி ஆவாள்
பிழையற்று வாழ்பவளே பெருகி வாழ்வாள்! 15

நாத்தனார்

பிறந்தாலும் நாத்தனார் ஆவ துண்டு
பெரியதொரு நட்பாலும் ஆவ துண்டே!
அறந்தானே என்கின்ற தன்மை யாலே
ஐயையவள் கண்ணகிக்கு நாத்தி ஆனாள்!
மறந்தாலும் நாத்தனார் மருகி மீது
மனதாரக் கோள்சொல்லல் தொழிலாய்க்கொண்டார்
சிறந்ததொரு பாத்திரமாய்க் குடும்பத் துக்குள்
சேட்டையிலே மிக்கவளும் நாத்த னாரே! 16

முடிப்புக் கவிதை

நல்லதொரு குடும்பத்தின் மாமன் தொட்டு
நாத்தனார் ஈறாக உள்ள பேரை
வல்லமையால் தம்கவியில் இழுத்து வந்து
வாகான புகழ்சூட்டி வசையும் பாடி
வெல்லாத உங்களையும் வென்று விட்டார்
வேதனையால் தம்குரலை மன்றில் வைத்தார்
சொல்லாத கருத்தெல்லாம் உய்த்து ணர்ந்து
சுவையாக வாழ்ந்திட்டால் குடும்பம் வாழும்! 17

காலத்திற் கேலாத சடங்கை எல்லாம்
கருத்துக்கே ஒவ்வாத முறைகள் எல்லாம்
ஏலத்தில் கூவுவதைப் போலக் கூவி
இன்றுவரை குடும்பத்தை வேக வைத்து

ஞாலத்தை சீரழித்த காட்சி போதும்!
நலமான பாதையிலே நடைகள் போட்டுப்
பாலத்தைப் புதிதாக்கப் பறந்து வாரீர்
பண்பாட்டைப் புதுப்பிக்க முனைந்து செல்வீர்! 18

முறையென்ற பேராலே கேட்டு வாங்கி
முடைநாற்றம் வீசுவதைப் பணம்என் றாக்கிக்
குறையாமல் முறைகாத்து நித்த நித்தம்
குறைபேசி வாழ்கின்ற குடும்பத் தீரே!
வரையாமல் வழங்கிடயார் காம தேனு?
வதையாமல் வழங்கிடயார் கற்பகம்தான்?
திரைமறைவில் திட்டுகிறார் மக்கள், நாங்கள்
தெளிவாகத் திட்டுகிறோம் அரங்கி லேறி! 19

ஆதலினால் சீர்முறைகள் ஒழித்து வாரீர்!
ஆணவத்தால் குடும்பத்தை அழிக்க வேண்டாம்.
ஈதலிலே புகழ்பெற்ற குடும்ப மெல்லாம்
ஈனமென எண்ணுங்கள் சீர்கள் கேட்டல்!
சாதலிலும் சடங்குகளால் செலவு வைத்தார்!
சரிதானா? ஈதெல்லாம் எண்ணிப் பார்க்கக்
காதலினால் நற்கவிஞர் முழக்க மிட்டார்!
கருத்தினையே இதயத்தில் சிந்திப் பீரே! 20

வெள்ளம்போல் புதுமையெலாம் பொங்கிப் பாயும்
வெற்றிமிகு காலத்தில் கட்டை வண்டிப்
பள்ளத்தில் செல்லுவதா? குடும்பத் துள்ளார்
பதைபதைத்து வாழுவதா? ஒருநாட் கூத்தில்
உள்ளதெலாம் அழிப்பதுவா? பின்னர் வாழ்வில்
உறங்கிநிதம் சாவதுவா? குடும்பம் ஈதா?
கள்ளமிலாப் பெரியோரே! எண்ணிப் பார்மின்!
கைகூப்பி வேண்டுகிறேன் காக்க வாரீர்! 21

12. ஆறுபடை முருகன்

இராசசிங்கமங்கலத்தில் கந்தர்சஷ்டி விழாக்கவியரங்கில்
1–11–70 அன்று தலைமைதாங்கிப் பாடியது

இராசசிங்கமங்கலம்

நாற்பது கிராமம் நயமாக விளையவெனப்
பார்ப்பவர் கவரும் பழங்கண்மாய்ப் பூமியிது!
குன்றக் குடி முருகன் கோலத்தில் மகிழ்கின்ற
குன்றாக் குடிமக்கள் குலவுகின்ற பூமியிது!
இந்தப் பெரும்பூமி இராசசிங்க மங்கலத்தில்
சொந்த முருகனுக்குச் சுவையான விழாவெடுத்துக்
கவிதை அரங்கொன்றும் கண்டுள்ள பெரியோரே!
செவிகள் குளிரவெனத் தேன்பாய்ச்சும் பாவலரே!
முருகன் புகழ்கேட்க முனைந்துள்ள அவையோரே!
சிறுவன் உங்கள்முன் செப்புகிறேன் நல்வணக்கம் 1

ஆறுபடை வீடுகள்

சிறைவண் டொலிக்கும் பரங்குன் றிருக்கும்
குறைதீர்த் தருளும் குமரன் காக்க
முகமோ ராறும் கரமீ ராறும்
திகழ்செந் தூரிற் செவ்வேள் காக்க!
அரிஅயன் அரனும் முனிவரும் தொழவே
கிரிபழ நியிலே கிளர்ந்தோன் காக்க!
ஆறெழுத் துணர்ந்தோர் அந்தணர் வணங்க
ஏரகத் துறைந்த எம்மான் காக்க!
குன்றுவாழ் வேட்டுவர் குறவையில் மகிழ்ந்து
குன்றுதோ றுடும் குமரன் காக்க!
இழுமென விழும் இசைநிறை அருவிப்
பழமுதிர் சோலைக் கிழவோன் காக்க! 2

வேறு

ஆறு படைவீட்டில் அமர்ந்திருக்கும் பெருமாளே!
ஏறு மயிலேறி எனையாள வந்தவனே!

கூறு மடியார்கள் வினைகளைந்து கொள்பவனே!
மாறு படுசூரத் தனமொழித்து மகிழ்பவனே!

எங்கோ திரிந்தலைந்த என்னையுமே தடுத்தாண்ட
புங்கவனே! உன்னைப் புரிந்துகொண்ட தன்மையினால்

பாட்டில் வைக்கின்றேன்; பாசமுள்ள என்நெஞ்சக்
கூட்டில் குடியிருக்கும் கோமானே! கண்முன்னே

அழகு மயிலேறி ஆறு படை விட்டுப்
பழகு வேலேந்திப் பார்வையிலே காட்சிதர

வருவாய் என்றெண்ணி வாழ்த்துக்கள் பாடுகிறேன்
தருவாய் வரங்களெனத் தமிழள்ளித் தருகின்றேன்

அருண கிரியென்ன! ஆன்றகுரு பரனென்ன!
இருளைக் கிழித்தொளிரும் வேல்தாங்கி என்குமரா!

கண்முன் வருவாயேல் காவியங்கள் பாடேனோ?
பொன்னா கேட்கின்றேன்? புகழா நான் கேட்கின்றேன்?

ஆறு மணிமுடியின் அதிசயத்தைக் காணவென
ஆறு படைவீடும் அலைந்தலைந்தே தேய்வுற்றேன்

ஓங்கு பரங்குன்றம் ஒருமுறையா? இருமுறையா?
ஏங்கி ஏங்கிநான் ஏறியுள்ளேன் எழில்முருகா!

கத்தும் கடல்சூழ்ந்த செந்தூரின் எல்லையிலே
சுத்தி அலைந்ததுவும் சும்மாவா சொல்முருகா!

பழநி மலையேறித் தவம்கிடந்த பக்தியெலாம்
விழலுக்குத் தானோ? வெற்றிதரு வேல்முருகா!

பையப் பையநான் படியேறிச் சாமிமலை
ஐயா ஐயாஎன் றலறினேன் கேட்டிலையோ?

தணிகை மலையென்ன! வயலூர் வடிவென்ன?
பணிந்தேன் மலையெல்லாம் பன்னிருகண் பார்த்திலையோ

அருவி முழங்குகின்ற அழகர்மலை நடந்தேறி
ஒருமை யுடன் பணிந்தேன் உன்சித்தம் இறங்கலையோ?

கார்த்தி கைதோறும் குன்றக்குடி வந்துன்
சீர்த்தி பலபாடிச் சேவித்தேன்; நாள்தோறும்

வீட்டில் விளக்கேற்றி, வேல்முருகா! நக்கீரன்
பாட்டாம் முருகாற்றுப் படையோடு கவசங்கள்

படித்துப் பணிகின்றேன்; பாதத்தைப் போற்றுகிறேன்
நடித்துப் பழக்கமில்லை! நாயகனே முகம்காட்டு!

நடனம் ஆடுகின்ற பாதங்கள் நான்கண்டால்
திடமாய்ப் பிடித்தங்கே தேனருவி பாடேனோ!

முத்துப் புன்னகையின் மோகனத்தில் நானமிழ்ந்தால்
சொத்து சுகமென்ன? சொர்க்கமே காணேனோ?

சிக்கலிலே வயலாக, செந்தூரில் கடலாக
தணிகையிலே மலையாக; தரணியிலே கலையாக,

வாழும் முருகா!என் வாழ்க்கையிலே காட்சிதர
வேலும் தடுத்ததுவா? விளையாட்டாய் நின்றாயா?

சோதித் ததுபோதும்; சொர்ணமுகம் காட்டிடுக!
வாதித் ததுபோதும், வந்தென்னை ஆட்கொள்க!

உன்றன் கருணைக்கே உயர்புலவர் இருமூவர்
இன்றுன் பேரவையில் இருக்கின்றார் மங்கலமாய்
பாட்டுப் பலபாடிப் பாராட்ட நீஉன்
பாட்டுக் கெங்கோ ஒளியாமல் வந்திடுக
ஆன்ற தமிழ்ப்புலவர் ஆறுபேர் படையெடுக்க
ஈன்ற தமிழ்முருகா! இனியெங்கே, தப்பிப்பாய்!
அரங்கில் கூடியுள்ள அனைவர்க்கும் உனதருளை
வரமாய் வழங்கிடவே வாமுருகா! எனக்கூறி
என்றன் தலைக்கவிதை இத்துடனே முடித்திவரை
நன்றே அழைக்கின்றேன் நான்.

முடிப்புக் கவிதை

ஆன்ற தமிழ்ப்புலவர் ஆறுபடை எடுத்துவர
சான்ற புலமையினுல் தளபதியாய் நான்தொடர,

பக்தி முதிர்ச்சியினுல் பாவலர்பின் நீர்தொடர
சக்தி அனைத்தையுமே ஒன்ருக்கிப் போராடி

வெற்றி பெற்றுள்ளோம்; வேல்முருகன் சிக்கிவிட்டான்
சுற்றி அலைந்தவனை உள்ளச் சிறையிட்டோம்

தண்ணீர் ஊற்றியா முருகனை நீ ராட்டுகிருேம்?
கண்ணீர் வடித்தன்ருே கணந்தோறும் ஆட்டுகிருேம்

பூவால் அர்ச்சித்துப் புகழ்மாலை சூட்டுகிருேம்
நாவால் புனைந்தேத்தி நாயகனைப் போற்றுகிருேம்

தங்க விளக்கான முருகனை நம் உள்ளத்தில்
தங்க வைப்பதற்குத் தமிழ்த்துணையை நாடுகிருேம்

மேடை அனைத்தும்அவன் மேன்மையினைப் பேசுகிருேம்
கோடை மழைபோலக் கொட்டுகிருேம்; நற்கவிதை

மழையில் நனைந்தீர்கள்; மாமுருகன் சிந்தனையாம்
விளைவில் திளைத்தீர்கள்; வேலுண்டு பயமில்லை

என்றே கூறி எல்லோர்க்கும் நன்றிசொலி
நன்றே கவிமுடித்தேன் நான்.

13 திருச்செந்தூர் முருகன்

கவிஞர் கண்நோயால் வாடியபொழுது 1971 ஏப்ரலில்
திருச்செந்தூர் முருகன் திருமுன்பு பாடியது)

பன்னீரும் சந்தனமும் பாலாபி ஷேகமுமாய்
எந்நாளும் காட்சிதரும் எம்முருகா!—உன்னடியில்
கீழ்கடலும் பாடும் திருச்செந்தில் வாசலிலே
வாழ்வுபெறப் பாடுகிறேன் வந்து. 1

அலையலையாய்ச் சூழும் அடியாரும் நீரும்
தலைவணங்கிப் பாடுதமிழ்ச் செந்தில்—நிலைபெறும்எம்
வள்ளி கணவா! வடிவேலா! வேல்முருகா!
அள்ளி அணைப்பாய் அறிந்து! 2

முருகா! முருகா! முருகா! முருகா!
வருவாய் முருகா! வடிவேல்!—குருநாதா!
செந்தில் குமரா! சிவனின் திருப்புதல்வா!
கந்தா! கழல்இணையே! காப்பு! 3

கோடி அருச்சனைகள் கோத்த திருமலர்கள்
தேடிக் குவிக்கும் திரவியங்கள்—நாடிவரும்
சண்முகா! உன்னடிக்குச் சாற்றுகிறேன் என்பாக்கள்
அன்புடைய செந்தூரா! ஆள்! 4

காலைக் கதிரோனின் முன்னெழுந்து பக்தரெலாம்
சோலைச் சுரும்பாகச் சுற்றுகிறார்—வேலை
பணியும் திருச்செந்தில் பாதார விந்தம்
அணியும் இதயம் அறிந்து! 5

விண்ணோரைக் காத்து வினைதீர்த்த பாலாளன்
கண்ணோயை நீக்கிநீ காத்தருள்க!—பண்ணாலே
பாடுகிறேன் செந்தில் பதிவந்து காவாயேல்
வாடுபவர் என்னாவார்? வா. 6

கம்பி இருபுறமும் சூழஉன் சந்நிதியில்
நம்பி இருக்கின்ற நல்லடியார்—தும்பியெனச்
சுற்றி வருகின்றார் சொல்மலரைத் தூவுகிறார்
சுற்றுதுயர் செந்தூரா! தூள். 7

ஆறு முகத்துக்குச் சண்முகா! அர்ச்சனைகள்
கூறும் விதத்தைநான் கூறுவனா?—நீறு
புனையும் திருக்கோலம் போற்றுவனா? செந்தூர்
எனையும் அருள்வதுதான் என்று? 8

தங்கக் கவசங்கள் தன்னிகரில் ஆபரணம்
எங்கும் திகழும் எழில்முருகா!—வங்கக்
கடலை இழுக்கும் கரமுடையாய்! செந்தூர்
மணலாய்ப் பிறவேனோ மன்! 9

வீசும் ஒளியுடைய வீரவேல்! சந்தனங்கள்
பூசும் திருக்கோலம், பொன்னங்கி—ஈசாஉன்
நாழிக் கிணறு நலமெல்லாம் காண்பதனால்
வாளி எனப்பிறப்பேன் வந்து 10

நாடு செழித்திடவே செந்தூரா! நாயகமாய்
வீடு தரவந்தாய் வேலவா!—பாடு
படுவோர்க்கு நீயும் பணிசெய்யா விட்டால்
விடுவோமா நாங்களெலாம் வேல்? 11

நாத சுரமுழக்கம், நல்லோர்கள் சூழ்ந்தொலிக்கும்
வேத முழக்கங்கள் வேலவா—காதங்கள்
கேட்கும் மணிமுழக்கம் தேவார நன்முழக்கம்
மீட்கும் திருச்செந்தூர் மீது! 12

14 பெருமாள் பெருமை

பொள்ளாச்சி வரதராசப் பெருமாள் கோயில்
கும்பாபிஷேகத்தின் போது பாடியது

நறுந்துழாய் மாலை கண்டும்
நாயகன் கோலம் கண்டும்
பொருந்துகைச் சங்கம் கண்டும்
புனிதசக் கரமே கண்டும்
விருந்தெனப் பரவி நிற்கும்
வேங்கட மலையே கண்டும்
திருந்திய நெஞ்சம் தானே
திவ்வியமாம் பிரபந் தம்மே! 1

தாயினும் பரிந்து சாலத்
தயவினைக் காட்டி இந்தச்
சேயினைப் பாது காக்கும்
செயலினால் பெருமாள் பாதம்
தோய்கிறேன் அடிமை யாக!
தொழிலெலாம் அவனுக் கன்றோ!
கோயிலைப் புதுப்பித் தல்தான்
கோடியிற் பெரிதே அன்றோ! 2

முன்னேயோர் கண்ட தெல்லாம்
மூடமே என்று சொன்ன
பின்னேயோர் முழக்க மெங்கே?
பேசிய பேச்சு மெங்கே?
தன்னேயே அறியாப் பிள்ளே
தாயருள் அறிவ தெங்கே?
நின்னேயே தொழுவ தல்லால்
நெடுமாலே! தொழிலு முண்டோ! 3

சூடிய மலரைக் கண்டால்
சுதந்திரப் பேறு பெற்றேன்
நாடிய பாதம் கண்டால்
ஞானநல் விழிகள் பெற்றேன்
பாடிய பாடல் கண்டால்
பாரெலாம் அடையப் பெற்றேன்
மூடிய நாமம் கண்டாலீ
முத்தியும் அன்றே பெற்றேன் 4

வரதனின் கோலம் என்ன
வார்த்தையில் அடங்கு மாமோ?
பரதனின் அண்ணன் என்ன
பாட்டிலே அடங்கு வானு?
விரதமே இருந்த போதும்
விழியருள் கிடைப்ப துண்டோ;
வரதரா சன்கோ யிற்கு
வந்தவர் உய்வா ரன்ருே! 5

15 திருமால்

நண்பர் ஒருவர் கால்நோயால் வாடியபொழுது
அவரது திருமால் வழிபாட்டுக்காகப் பாடிக்கொடுத்தது

ஆலிலையில் வாழும் அமரர் பெருமானே!
நூலிழையில் யானையதன் நோய்தீர்த்தாய்— காலிழைய
மார்க்கம் சிறிதின்றி மாலானேன்— என்பிணியைத்
தீர்க்கநின் தாள்பணிந் தேன். 1

ஐயப்பன்

நாளும் பணியாற்றி நன்றாக வாழ்ந்தயான்
சூழும் பிணியால் சுமையானேன்— பாழும்
பிணிகண்டேன்; நீக்கிப் பெருமானே! பம்பை
மணிகண்டா! காப்பாய் மகிழ்ந்து! 2

வெங்கடாசலபதி

ஏங்கிடநான் தீமை எதுசெய்தேன்? என்தெய்வ
வேங்கடவா! ஏனோ விளையாட்டு? — தாங்கிடநான்
ஆற்றலே இன்றி அலறுகிறேன்; என்பிணியை 3
மாற்றவே வாராய் மகிழ்ந்து!

16 ஐயப்பன்

19—12—70 அன்று புதுவயல் ஐயப்பன் சேவாசங்கக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கிப் பாடியது

வணக்கம்

என்னை வளர்த்த எனதருமைப் பூமியிலே
அன்னை கவிகேட்க ஐயப்பன் முறுவலிக்க,

சுற்றும் நண்பர்குழாம் சுற்றத்தார் மகிழ்ந்திருக்க,
முற்றும் துறவறியாக் கவிவாணர் சூழ்ந்திருக்க,

என்னைத் தலைவனென இங்கிருத்தி ஐயப்பன்
தன்னைக் கவிபாடத் தமிழ்தந்த பேரவையீர்

சித்தம் பக்தியினால் சேவிக்க இவண்வந்து
புத்தம் புதுக்கவிதை கேட்கின்ற பெரியோரே!

என்றும் அகலாத இயல்பாலே ஐயப்பன்
மன்றில் கூடியுள்ள தாய்மாரே! நற்புலவீர்!

உங்கள் அனைவர்க்கும் உயர்தமிழால் என்வணக்கம்!
தங்கக் கவிகேட்பீர் தழைத்து.

ஐயப்பன்

குருநாதன்! ஐயப்பன்! கோயில்கொண் டுள்ளத்(து)
உறைநாதன்! வையத்தா ரோடு—திருவார்
கவிவாணர் யாவர்க்கும் கண்காட்டிக் காக்கும்
புவிவாணன் சாஸ்தா புகல்! 2

(வேறு)

புலியை அடுத்தவனே சரணம்பொன் ஐயப்பா
புகழை உடுத்தவனே சரணம்பொன் ஐயப்பா

கிலியை ஒழித்தவனே சரணம்பொன் ஐயப்பா
கீர்த்தி கொடுத்தவனே சரணம்பொன் ஐயப்பா

காட்டில் வளர்ந்தவனே சரணம்பொன் ஐயப்பா
காற்றில் கலந்தவனே சரணம்பொன் ஐயப்பா

பாட்டில் பொதிந்தவனே சரணம்பொன் ஐயப்பா
பக்தி பொழிபவனே சரணம்பொன் ஐயப்பா 3

(வேறு)

அச்சன் கோவில் அமர்ந்தவனே ஐயப்பா!
ஆரியங் காவில் உறைந்தவனே ஐயப்பா!

பந்தள நாட்டுப் பாலகனே ஐயப்பா!
படிபதி னெட்டுப் பார்த்திபனே ஐயப்பா!

எரிமேலி மேட்டுச் சாஸ்தாவே! ஐயப்பா!
ஏழ்மைபிணி பாவம் தீர்த்தாயே ஐயப்பா

இருமுடிப் பிரியா இனியோனே ஐயப்பா!
மணிமுடி தரித்தாய் மணிகண்டா ஐயப்பா!

ஐந்து புலன்களை அடக்கினுய் ஐயப்பா
மைந்தர் மமதையை மடக்கினுய் ஐயப்பா!

சபரியின் சாபம் தவிர்த்தனை ஐயப்பா!
சத்தியம் நேர்மை வளர்த்தனை ஐயப்பா!

பிரமனும் வணங்கும் பெரியனே ஐயப்பா!
பிரமச் சரியம் பேணினை ஐயப்பா!

ஆசைகள் ஓட அடித்தனை ஐயப்பா!
பூசைகள் ஓங்கப் புரிந்தனை ஐயப்பா!

பம்பா நதியில் பயின்றனை ஐயப்பா!
வம்ப மகஷியைக் கொன்றனை ஐயப்பா!

அஞ்சு மலையின் அதிபதி ஐயப்பா!
நெஞ்சக் கடலின் நிறைபதி ஐயப்பா!

சாந்த ரூபியே சாஸ்தாவே ஐயப்பா!
ஏந்தி எங்களை இரட்சிப்பாய் ஐயப்பா!

சுந்தர வள்ளலே சுடர்மணி ஐயப்பா!
சுயநலம் அறுத்துப் பயம்தீர் ஐயப்பா!

தேங்காய் நெய்யிலே திளைத்தாய் ஐயப்பா
பாங்காய் பக்தியை வளர்த்தாய் ஐயப்பா

கனிமலர் மகிழும் கருணையே ஐயப்பா
கற்பூரம் விரும்பும் கலைஞான ஐயப்பா!

மலையாளத் திருந்து காக்கிறாய் ஐயப்பா!
மாத்தமிழ் நாட்டை நோக்கினாய் ஐயப்பா!

பங்குனி உத்திரத் துதித்தாய் ஐயப்பா!
பந்தளப் பூவில் வதிந்தாய் ஐயப்பா!

வேதப் பொருளெலாம் விளைந்தனை ஐயப்பா!
வெற்றித் தலைவனாய் விளங்கினை ஐயப்பா!

மனிதனைத் தெய்வமாய் உயர்த்தினை ஐயப்பா!
மமதைகள் ஆசையை அழித்தனை ஐயப்பா 4

வேறு

நிலத்தில் பிறந்தாடி நீரில் விளையாடிக்
குலத்து மாமன்னன் தோளில் குதித்தாடி

அரசி மடியாடி அடியார் முடியாடி
முரசு துடியாடப் புலியைப் பொருதாடி

உலகில் நடமாடி உளத்தில் விருந்தாடி
மலையில் இருந்தாடி இருளைப் பந்தாடி

உலகம் சுழன்ருடி உய்யநீ காற்ருடி!
கலகம் அகன்ருேடிக் கருணை அலையோட

சபரி மலைஏறி உபரி வளம்தந்த
சபரி மலைஐயா சரணம் ஐயப்பா!

பம்பை நதிகண்டு பந்த(ள) நலமுண்டு
வம்பைப் புறங்கண்டு வளர்ந்த ஐயப்பா!

புலியை வலமாக்கி உலகை இடமாக்கி
ஒலியைப் பொருளாக்கி உயர்ந்த ஐயப்பா!

பக்தர் திரளாகப் பவனி தினமாக
முக்தர் தலமான முருக ஐயப்பா!

கருமை உடையோடு கருணை முகமோடு
பெருமை அடியார்கள் பெருகும் ஐயப்பா!

படிகள் பலஏறி விரதம் பலகூடி
அடியர் தொழுதேத்தும் சபரி ஐயப்பா!

மாலை விளக்கேற்றி பஜனை முழுக்கேற்றி
நாளை இனிதோட்டும் அடியார் ஐயப்பா!

சாதி மதமின்றி ஆதி முடிவின்றி
ஓதி ஒன்ருகும் அடியர் ஐயப்பா!

கவியில் பொருளாகி, செவியில் சரணுகிப்
புவியில் ஒளியூட்டும் புனித ஐயப்பா!

புலனை அடக்காத சிலரை நடக்காது
நிலனில் சோதிக்கும் சபரி ஐயப்பா!

இனிய விரதங்கள் இருந்த அடியர்க்குக்
கனிய வழிகாட்டும் காட்சி ஐயப்பா!

(வெண்பா)

தலையில் மணிமுடியும் தங்கி நகையும்
மலையில் வீற்றிருக்கும் மாண்பும்--கலையை

உணர்த்தும் கரமும் உயர்ந்த திருத்தோள்
திறத்தும் நமதய்யப் பன்

முறுவல் முகத்தான் சின் முத்திரைக் கையான்
உருவில் அழகான்; உட்கார்—பெருமான்

பொழியும் அருளால் புவனம் வளர
விழிகள் இமைத்திடா வே 7

மாலை அழகும் மணிமுடியும் காதாடும்
ஓலை அழகும் ஒளிமார்பும்—காலை

மடித்த அமைப்பும் மதிவனப்பும் ஐயன்
துடித்தோருக் கென்றும் துணை! 8

முடிப்புக் கவிதை

ஆன்ற தமிழ்ப்புலவர் ஐயிருவர் இவ்வவையில்
ஈன்ற தமிழாலே ஐயப்பன் இணையடிகள்

தொழுது கவிசொன்னர் தொண்டரெலாம் பூரிக்க
அழுது சுவைத்தவர்கள் அவனருளைப் பெறலாமே

நல்ல கவிகேட்டீர்! நாயகனை மறவாதீர்
தெய்வம் இலையென்பார் தேசத்தில் உள்ளார்கள்

பொய்யே தெய்வமெனப் புலம்புவோர் போகட்டும்
பைய அவனருளைப் பார்க்கின்ற காலம்வரும்

ஐயன் இணையடிகள் காட்சிதரும் நேரம் வரும்
சோதித்து நம்மைச் சுகமாக்க அவன்வருவான்

பேதித்து நாம்தான் பிதற்றுகின்ருேம்; அதற்குள்ளே
தெய்வம் பொய்யென்று சீறுகிருேம்; அவனுக்குப்

பொய்யே கண்களெனப் புலம்புகிறோம் அம்மம்மா!
துடிக்கும் நேரத்தில் பொறுமையுடன் நன்னூலைப்
படித்து மகிழுங்கள் மனஅமைதி கொள்ளுங்கள்
காலம் வருமென்று காத்திருங்கள்; சுடரோடு
ஞாலம் தனைவிளக்க நாயகனே வந்திடுவான்!
சொர்க்கம் நமக்குண்டு; சோதனையும் நமக்குண்டு;
தர்க்கம் இதில்இல்லை; தரித்திரத்தில் சீருதீர்!
தெய்வம் துணையென்று தேறுங்கள்; அறவழியில்
செய்ய பணியாற்றிச் சிறந்தோங்கி வாழுங்கள்
பாட்டுப் புலவோர்க்குப் பாண்டியரோ பரிசளிப்பர்
பாட்டுப் புலவோர்க்கு நீங்களென்ன தருவீர்கள்?
கேட்டால் எழுவீர்கள்; கேட்கின்றேன் ஒரு பரிசு
நீட்டும் கைகளினல் கைதட்டல் தாருங்கள்;
என்றே கூறி எல்லோர்க்கும் தலைபணிந்து
நன்றியுடன் கவிமுடித்தேன் நான் 9

17. காந்தி அண்ணல்

(திருவாடானை காந்தி நூற்றாண்டு விழாக் கவியரங்கிற்கு
4—10—69 அன்று தலைமைதாங்கிப் பாடியது)

பாட்டினிலே பாரதியாய் இல்லாப் போதும்
பழம்புகழின் நற்கம்பன் ஆகாப் போதும்
நாட்டமுடன் காந்திமகான் காதை தன்னை
நலமான கவியாக்கி அரங்கி லேற்றி
ஊட்டிடவே வந்துள்ளேன்; உங்கள் முன்னே
உயர்கவிஞன் அல்லேன்நான் என்ற போதும்
ஓட்டமெலாம் பாட்டினிலே வைத்து விட்டேன்
உட்கார்ந்து கவிகேட்பீர்! வணக்கம் நன்றி! 1

நாட்டுக் கொருதலைவன்; நாகரிக உலகத்தின்
காட்டுத் தனம்நீக்கிக் கண்திறந்த கண்மணியான்!

வெள்ளைப் பேரரசு வெட்டிவைத்த குழிப்பிறந்த
வெள்ளப் பெருக்கமவன்; வெற்றிக்கே சின்னமவன்!

சின்னப் பருவத்துச் செயல்களினல் மனிதனவன்!
பிள்ளை உலகத்துப் பெரும்பணியால் தெய்வமவன்!

தேடிப் பொருளீட்டும் தேசத்தில் அவனெருவன்
கோடி அருளீட்டும் குலதெய்வம் ஆயினனே!

நல்ல மாளிகையின் நாகரிகப் பிறவிஅவன்
செல்வக் குடும்பத்தின் சிங்காரக் குழந்தைஅவன்

ஆன்ற பலகல்வி அறிந்தஉயர் கல்விமான்!
சான்ற சட்டத்தைச் சார்ந்ததனல் வழக்கறிஞன்

கத்தூரி பாயின் கைப்பிடித்த கணவனவன்
சொத்தெல்லாம் உடைய சுகவாச முதலாளி

என்ற நிலையிருந்தும் ஏற்றமிகு காந்திமகான்
சான்ற பெருமையெலாம் சந்தையிலே குப்பையென

வீசி எறிந்தான்; வீதிக்கே வந்துற்ருன்;
பாசி படிந்த பண்பில்லாச் சமுதாயச்

சேற்றில் அமர்ந்தான்; சிங்கமெனக் கர்ச்சித்தான்
ஆற்றின் பெருக்காய் அரும்பணிக்குப் புறப்பட்டான்

தீண்டாதார் நடுவே தென்றலாய் இவ்வுலகில்
வேண்டா வகுப்புப்போர் வீழ்த்துகின்ற புயலாகி

இந்து முஸ்லிம்கள் ஒற்றுமைக்கே எந்நாளும்
சந்து விளக்காகி சரித்திரத்து நாயகனய்

அடிமை விலங்கறுத்த அரசனய், உழைக்காத
மடமை தனைஒடித்த மனிதனய், எந்நாளும்,

நாட்டுப் பணிக்கென்றே நடைபோட்ட காந்திமகான்
கூட்டுப் பிரார்த்தனையைப் புதுப்பித்த குலக்கொழுந்து!

காக்கும் அகிம்சைக்கே கைகாட்டி! வையத்தை
ஈர்க்கும் அருட்காந்தம்! எல்லைகளே இல்லாத

புதிய உலகத்தைப் படைப்பிக்கும் புகழ்ச்சிற்பி!
பொதிய மலைகூடப் புறங்காட்டும் பேராற்றல்!

போற்றும் கொள்கைக்கே பொறுமையுடன் உயிர்நீத்துக்
கூற்றும் மகிழ்வித்த கொடையாளன் காந்தியினைப்

பாட்டில் வைத்துப் பாராட்டி நம்இதயக்
கூட்டில் வைத்துக் கொள்கையெலாம் மேற்கொண்டு

நாளும் பணிசெய்தால் நாடெல்லாம் பொலிவுபெறும்
வாழும் மனித இனம் வளர்ந்து. 2

18 இராஜாஜி

காரைக்குடியில் இராஜாஜியின் 93வது பிறநாட் கவியரங்கில்
3—1—71 அன்று திரு சா. கணேசன், M. L. C.
தலைமையில் பாடியது

பருவம் மாறுகின்ற பருவத்தில் அரசியலில்
உருவம் மாறுத ஒருவனை நாம் பாடுகின்றோம்.

தீய பனிகழியத் திருமாதம் தைதோன்றும்
ஆய பருவத்தில் அரசியலைப் பாடுகின்றோம்.

காலை ஒருகட்சி; கடும்பகலில் ஒருகட்சி;
மாலை மறுகட்சி நள்ளிரவில் பிறகட்சி;

என்றுமா றுகின்ற இப்பருவ வேளையிலே
நின்று பாடுகின்றோம் நினைவெல்லாம் எங்கெங்கோ!

கட்சிமாருமல் கட்சியையே மாற்றுகிற
பட்சி ராஜா தான் ராஜாஜி ராஜாஜி!

நீட்டும் கரத்தினுல் நேரத்திற் கொருவரென
வீட்டிற் கிழுத்து விளையாடும் எம்பெருமான்!

பெரியார் சந்தித்தார்; பிளந்ததனை நாமறிவோம்!
அறிஞர் சந்தித்தார்; அறிவோம்நாம் அறுபத்தேழ்!

காம ராசரின்று கைபிடித்தார் அதன்விளைவைத்
தாம றிந்து சொல்வார் தரணியிலே யாருண்டு?

தூண்டில் வீசிடுவார்; துடிக்கின்ருர் தலைவரெலாம்!
போண்டி போண்டியெனப் போகின்ருர் பகைவரெலாம்

கையில் கயிறெடுப்பார் அரசியலே பம்பரமாய்ப்
பையில் சுழலுதடா! பரந்தாமன் விளையாட்டில்!

அற்றை வள்ளுவனே! அரசியல்சா ணக்கியனே?
இற்றை மாமுனியோ! இவனென்ன பிறவியடா!

கோட்டை கொத்தளத்தில் வாழ்வோரும் இவன்வைக்கும்
வேட்டைத் தாங்குகின்ற வினையறிய மாட்டாரே!

நல்ல விதமாக இந்தியாப் படம் தீட்டி
வல்ல ராஜாஜி நிற்கின்ற படம் வரைந்தால்

தலையில் இமயத்தைத் தாங்குகின்ற உருவத்தான்
உலையா இதயமோ ஒப்பற்ற டில்லியிலே!

இடையோ விந்தியத்தில் இருக்கின்ற தோற்றத்தான்!
நடையோ குமரியிலே நளினமிடும் பாதத்தான்!

முழங்கால் சென்னையிலே முட்டுகின்ற போதெல்லாம்
பழங்கள் பலஉதிரும் பண்டுமுதல் காண்கின்ருேம்!

இதயம் டில்லியிலே இருப்பதனுல் இராஜாஜி
இதயம் எரிமலையாய் இருப்பதுவும் டில்லியிலே!

இடக்கை வங்காளம்; வலக்கை பம்பாயே!
கிடக்கை சென்னையிலே; கீர்த்தியெலாம் தரணியிலே!

பாரதத் தாயின் தலைவிதியைப் படைக்கின்ற
சாரதியே இந்தச் சரித்திரத்து ராஜாஜி!

தீர்க்க தரிசனத்தில் பிரமனுமே திண்டாடி
வேர்க்க விறுவிறுக்க வேலையிலே குழம்பியதால்

இடது சாரியிலே எவரெவரோ சேர்கின்றார்!
வலது சாரியிலே தலைவரெலாம் வாழ்கின்றார்!

கண்ணன் வினை யாட்டில் கௌரவர்கள் சமாதி!
கண்ணன் ராஜாஜி கவனமெலாம் அரசியலே!

பகடை உருட்டுகிறான் பலியாவார் யாரறிவார்?
சகடை ஓட்டுகிறான்; சரித்திரமே ஓடுதடா,

தூரம் நினைக்கின்ற தூரதிர்ஷ்டிக் கண்ணாடி
சாரம் உரைக்கின்ற வசிஷ்ட மா மேதை முனி

பாரதத்தை விட்டு பாகிஸ்தான் பிரிக்கவென
வீரமுட னன்றே விளம்பினான்! நடந்த கதை!

சீனர் நட்புவெறும் சிங்கார மயக்கமென
ஆன வரைஉரைத்தான் அவன் வார்த்தை யார்கேட்டார்

இமய முகடேறி எந்திரத்துப் பாக்கியெலாம்
சமயம் அறிந்து சதிசெய்த வேளையிலே

சீனர் சூழ்ச்சியினை நேருணர்ந்தார்; ராஜாஜி
ஈனர் மதியினையே என்றைக்கோ அறிந்துரைத்தார்

வீக்கே கிருஷ்ணமேனன் பாதுகாப் பமைச்சரெனில்
சீக்கே நாடென்று சித்தரித்தார் ராஜாஜி!

படுத்தே வெற்றியெனப் பண்டுரைத்த காமராஜை
படுப்ப துறுதி என்றான் வெற்றியில்லை என்றுரைத்தான்

அதனை நாமறிந்தோம் அறுபத்தேழ் தேர்தலிலே!
பதமாய் அவர் இருவர்; பகடாக நாடென்னும்

வண்டி சேர்ந்திழுக்க வரிந்துவரும் வேளையிது!
வண்டிக் குள்ளிருந்தோர் குடம்சாய்ந்து வாடுகிறுர்

நாடு பொதுவுடைமைச் சகதியிலே ஆழாமல்
பாடு பல பட்டான்; பாதங்கள் தேய்வுற்றுன்

சட்டம் போடுமுன் சாட்டையடி கொடுப்பதுவும்
சட்டம் போட்டபின் நீதிமன்றில் நிறுத்துவதும்

எல்லாம் அவன் செயலே! ஏற்றமெலாம் அவனுக்கே
எல்லே இல்லாத தீர்க்கதரி சனத்தாலே

தீர்க்காயு சாகத் திகழ்கின்றுர் ராஜாஜீ
அற்பாயு சாக ஆகின்றுர் எதிர் வரிசை!

பேனு எடுக்கின்றுன் பெரும்புயலே சூழுதடா
காணு உண்மையெலாம் கண்ணுடி காட்டுதடா

மேடை இருப்பான்; மேலோர்கள் மத்தியிலே
சாடை உரைப்பான்; சங்கடமே அன்றுமுதல்!

கண்டம் அத்தனேயும் கணிக்கின்ற பேராசான்!
சுண்டல் விரும்பாத சுயநலமில் பூசாரி!

தனக்கு தனக்கென்று தானலேயா நற்றலேவன்!
கணக்கு பொய்யாகாக் காந்திய வாரிசவன்

நீந்தி எதிர்நின்று நிலேத்திட்ட ராஜாஜி
வாழ்ந்திடுக பல்லூழி வாய்த்து!

19. லெனின்

இராமநாதபுரம் மாவட்டத் தமிழாசிரியர்கழக மாநாட்டுக் கவியரங்கில் விருதுநகரில் 15—11—70 அன்று திருமுத்தாசி தலைமையில் பாடியது.

ஆன்ற கவியரங்கின் அருந்தலைவ! கூடியுள்ள
சான்ற புலவோரே! தமிழ்வளர்த்த நாயகரே!

உலகைத் திருத்தியதால் உயர்ந்தோர்கள் வரிசையிலே
சிலரே இருக்கின்றார்; சிந்தனையில் வாழ்கின்றார்

நாமோ பலபேர்கள்; நாளையழ ஆளில்லை!
ஏனோ தானோவென் றிருக்கின்றோம் எண்ணிடுவீர்!

சான்றோர் உலகத்தின் சரித்திரத்தில் ஏறிடவும்
மாண்டோர் பிறரெல்லாம் மண்ணுக்குள் இறங்கிடவும்

வகுத்த விதியன்றோ! வாய்க்காலாய் ஓடுதய்யா
உகுத்த கண்ணீரில் உலகத்தின் சரித்திரத்தை

எழுதிப் பார்த்தீரேல் ஏழெட்டுப் பேர்தெரியும்
தொழுத கைஉள்ளும்; தொண்டினையே நெஞ்சுள்ளும்!

மற்றோர் வாழவென மரணத்தைப் பரிசாகப்
பெற்றோர் ஆதலினால் பெயக்கண்டும் நஞ்சுண்டார்!

சொந்த நலமென்றால் உள்ளத்தைக் கல்லாக்கிப்
பந்த பாசத்தைக் குழிதோண்டிப் புதைத்திட்டு

வையத் தார்வாழ வாழ்வைத்தான் தியாகித்து
நையத்தான் செய்தார்கள்; நம்மைத்தான் உய்வித்தார்!

அந்த வரிசையிலே அன்றொருநாள் ரஷ்யாவில்
தந்த விளக்காகத் தடையுடைத்தார் லெனின்அன்றோ!

அரசர் ஆட்சியிலே தாயகமே அடிமையென
முரசம் முழங்குகையில் முழங்கையை உயர்த்தியவன்!

நான்கு படைகளையும் நயமான அரண்மனையும்
தாங்கும் அரசன்முன் தான்வணங்காத் தலையுடையான்!

உண்ண உணவில்லை, உறங்கிடவே இடமில்லை
எண்ண வலிவில்லை; இதயத்தில் துணிவில்லை

என்ற நிலைமையிலே இடருற்ற மக்களையே!
மன்றில் நிறுத்தி மார்தட்டச் செய்திட்டான்

எருமை மனநிலையில் இருந்திட்ட மக்களெலாம்
உரிமைக் குரல்கொடுக்க ஒருகையைத் தூக்கியவன்

ஒருகை தூக்கியதால் உலகத்தின் தலைவனவன்!
பலகை தூக்கியதால் மாணவர்க்குத் தலைவர்யாம்!

பாக்கி விடுதலைஎன் ருர்ப்பரித்தார் முன்னேதுப்
பாக்கி முனைநீட்டிப் பகடைக்காய் ஆக்கியசார்

மன்னன் தனைவீழ்த்தி மக்களரசேற்படுத்திக்
கன்னல் உரிமையினை கற்பனையை விடுவித்து

மக்கள் முன்காட்டி மடமையினைப் பின்னேட்டிச்
சிக்கனமாய் வாழ்ந்தான் சோவியத்துப் பெருந்தலைவன்

உழைக்கும் தொழிலாளர்க் கொருதலைவன்
லெனின்அன்ரே!
பிழைக்கும் தலைவரெலாம் பின்பாட்டுத் தலைவரன்ரே!

காய்ந்த உரிமைக்குக் கால்வாய்கள் வெட்டியவன்
சாய்ந்த உரிமையினைச் சரிப்படுத்தி ஏற்றியவன்

தேய்ந்த மக்களுக்குத் தேனமுதம் ஊட்டியவன்
ஓய்ந்த மக்களுக்கோர் உலகத்தைப் படைத்தலெனின்

வாழ்வைப் படித்தறிவோம், வளமான வழிநடப்போம்
தாழ்வை உடைத்தெறிவோம் தரித்திரத்தைச்
சாகடிப்போம்

நாட்டு நலம்பேணி நற்சமுதா யம்படைத்தே
ஏட்டினிலே வாழ்வோம் இனிது.

20. வள்ளல் அழகப்பர்

(காரைக்குடி அழகப்பா கல்லூரியில் 13—10—66 அன்று அழகப்பர் விழாக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கிப் பாடியது)

நல்ல கவியரங்கை நடத்துகின்ற மாணவர்காள்!
வள்ளல் புகழ்பாடும் வ. சுப. மா! என்முதல்வ!

அன்று முதலாக அரும்பணிகள் ஆற்றுகின்ற
என்றன் ஆசிரியிர்! ஏற்றமிகு பாவலர்காள்!

அழகன் உருவமைந்த ஆற்றல்மிகு கல்லூரிப்
பழகு தமிழ்மன்றில் பாடுதற்கே அழைத்தீர்கள்.

வள்ளல் புகழ்பாடும் வாய்ப்பென்ன கிடைப்பதுவோ!
உள்ளம் மகிழ உடனேதான் தலையசைத்தேன்!

இந்த வாய்ப்பைநான் இழந்திட்டால் இனிப்பாட
அந்த நூற்றுண்டே அடுத்துவரும் வாய்ப்பாமே!

நல்ல பெரியோரை நாமெல்லாம் நூற்றுண்டில்
ஒல்லும் வகையெல்லாம் உயர்வாக நினைக்கின்றோம்

மற்ற நாளெல்லாம் மறப்பதுவோ நம்கடமை!
கற்ற கல்வியெலாம் காசுக்கே அடிமையடா!

என்ன உலகமிதோ? எங்கேதான் சான்றாண்மை?
மன்னும் இமயமலை போன்றிருந்த அழகப்பன்

பெருமை தனைப்பாடப் பேதமையால் முந்துகிறேன்
அருமை மாணவர்காள்! அறிவுக்கே எல்லையவன்!

கோடையில் குற்றாலக் குளிர்அருவி அழகப்பன்!
தடைகள் உடைத்தெறியும் தன்மானச் சிங்கமவன்!

எட்டாச் சாதனைகள் ஏற்றமுடன் செய்ததனுல்
மொட்டாய் இன்னுமவன் முகிழ் கின்ருன் நம்முளத்தில்

எடுக்கத் தயங்குகிற இவ்வுலகில் அவனெருவன்
கொடுக்கப் பிறந்தான்; குவலயமே வியந்ததுவே!

அள்ளி எடுப்பான்; அத்தனையும் கல்லூரிப்
பிள்ளை எனவளரும்; பேதமையோ பலகாதம்

ஓடி ஒளியும்; உயர்கலைகள் அத்தனையும்
தேடி வளரும்; சிறப்பான கொடைஞனவன்!

தங்கம் அழகப்பன்; தட்டாமல் நகையாவான்!
சிங்கம் அழகப்பன் சீருமல் கொடைதருவான்!

அந்தப் பெருங்கொடைஞன் அருஞ்சிறப்பைப் பாடவென
இந்தக் கவிஞரெலாம் ஏற்றமுடன் வந்துள்ளார்;

வந்த அனைவரையும் வரவேற்று வாழ்த்துகிறேன்
சொந்தமுடன் கவிசொல்வீர் சுவைத்து

அழகப்பர்

கையாரப் பொழிவதிலே காம தேனு!
 காலார உழைப்பதிலே காந்தி வள்ளல்!
மெய்யாரப் பணிசெயலில் மேதை அப்பர்!
 மேலான சிந்தனையில் சாக்கி ரட்டீஸ்!
செய்யாத பணியில்லை அழகப் பன்தன்
 சீறிதயம் சேவையிலே பூத்த பூவே!
பொய்யாத முகிலானுன் அழக னுக்குப்
 புகழாரம் சூட்டிடுவோம் குழந்தை நாமே! 2

ஈயாத உலகத்தின் சிறுமை காட்டி,
இயலாத கொடைசெய்த வள்ளல் காட்டி;

ஓயாத பரம்பரையின் கோட்டை நீட்டி
உலகத்தில் தமிழ்க்கொடையை பேணிச்சென்ற

ஆயாக இருந்தவனும் அழகன்தொண்டை
அருங்கவியால் முழங்கிஇவண் பெருமை செய்யச்

சேயாக வந்துள்ள கவிஞர் நல்லீர்
சிட்டாகப் பறந்திடுவீர் கவிதை வானில் 3

21 மணிவிழா வாழ்த்து

திரு. வீரப்பசெட்டியார்(மீனாட்சி ஸ்டோர்ஸ் தேவகோட்டை)
உமையாள் ஆச்சி – மணிவிழா வாழ்த்து 5—3—70

நலமார்ந்த குடும்பத்தில் பிறந்து நாளும்
நற்றொண்டு பலசெய்யும் உயர்ந்த செம்மல்!

புலம்சான்ற பண்பாலே அனைவ ருக்கும்
புகழோடு துணைநிற்கும் புனித மிக்கோன்!

வளமார்ந்த பாதையினை அமைப்ப தற்கே
வாழ்க்கையிலே போராடி வாகை கொண்டோன்

உளமார வாழ்த்துகிறோம் உமையாள் சூழ
உயர்வுற்ற வீரப்பர் தழைத்து வாழ்க! 1

வீட்டிற்குள் தன்னிகரில் தலைவர் ஆவார்
வெளியுலகில் மிகப்பெரிய தொண்டர் ஆவார்

நாட்டுக்குள் பொதுப்பணியில் "சிங்கம்" ஆவார்
நலிந்துவரும் அனைவர்க்கும் நிழலாய் ஆவார்

கூட்டுக்குள் அடைபட்ட சமுதா யத்தின்
குலம்வளர இயன்றதெலாம் கூடிச் செய்வார்
பாட்டுக்குள் பொருளான வீரப் பர்க்குப்
பாராட்டு, பதவியெலாம் மிகையே அன்ரோ! 2

கல்லாத கலையில்லை; வீரப் பர்க்குக்
காணுத பொருளில்லை; உலகமெல்லாம்
சொல்லாலே கவர்கின்ற திறமை யாளர்!
சுவையாகக் காண்கின்ற மணிவி ழாவில்
வல்லாங்கு வாழ்ந்திட்ட திறமை போற்றி
வளமாகப் பல்லாண்டு வாழ்க! கூறி
எல்லோரும் வாழ்ந்திடவே இறைவன் பாதம்
இறைஞ்சுகிரும் மணிமக்கள் வாழ்க! வாழ்க!

———



கவிஞர் அரு. சோமசுந்தரன்,
M. A., B. T.,

பொன்முடி பதிப்பக வெளியீடுகள்

1	கட்டுரைப் பெட்டகம்	2-00	கவிஞர் "அரு.சோ."
2	கட்டுரைக் கற்கண்டு	1-00	"
3	செக்கிழுத்த செம்மல்	1-75	"
4	தியாகக் குடும்பம்	1-75	"
5	விடுதலைவேட்கை	1-50	"
6	திருமுறைகள் வீட்டுநூல்	3-50	"
7	கடமை	2-00	"
8	கவிஞர் சோமசுந்தரன் கவிதைகள்	3-50	"
9	முகமூடி	2-00	"
10	பக்திப்பாக்கள்	2-00	"
11	கட்டுரைக் கற்பகம்	2-00	"
12	வள்ளல் அழகப்பர்	1-50	"
13	திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்	1-50	"
14	ஆங்கில அருங்கதைகள்	1-50	"
15	இரண்டாம் ரிச்சர்டு	1-50	"
16	கவியரசர் தாகூர்	2-00	"
17	தந்தைப் பேழை	5-50	புலவர் இளங்கோ
18	விந்தையான விசிறி	1-75	" கடல்வண்ணன்
19	சுவாமிதாயுமானவர்	1-50	" கு. ஆறுமுகனார்
20	திரு வி. க	1-75	"அருசோ" M. A. B.T.
21	உலக தத்துவ ஞானிகளின் குரல்	2-25	K. S. லெட்சுமணன்
22	Ravi Guide for English II of IX to XI Std.	2-00	CR. Srinivasan& N. Chenpaham
23	வீரசவர்க்கார்	4-00	புலவர்கு. ஆறுமுகனார்
24	மாக்பெத்	2-50	கவிஞர் அரு. சோ.
25	அந்தோனியோவும் கிளியோபாட்ராவும்	4-50	"
26	வெற்றியாருக்கு	2-50	புலவர்கடல்வண்ணன்
27	வஞ்சிக்கோவில்	3-00	கவிஞர் இராசகோபாலன் M.A.
28	ஐம்பொறிகள்	1-50	கவிஞர் அரு. சோ.
29	எண்ணியஎண்ணியாங்கு	3-50	"
30	பொன் விரிப்பு	1-50	கவிஞர் காரை நா. பூமிநாதன்
31	செந்தமிழ்த்தேவர்	1-50	புலவர் ஆறுமுகனார்
32	மலேசிய மங்கை		வி. ஜோசப்
33	அடியார் அறுபத்து நால்வர்	4-00	கவிஞர் அரு. சோ.
34	எண் கணிதமும் கைரேகையும்	10-0	தியாகமூர்த்தி

தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-போன்: 300.